விலை ரூபா: 8.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036, ஆனி 18 சனிக்கிழமை (02.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 195

வாழ்நாள் முழுவதும் வளமுடன் வாழ அண்ணா
ஜீவாகாரம்
உடனடியாக உண்ணக்கூடிய நிலையில் உள்ள சத்துணவு விபரங்களுக்கு
அண்ணா கோப்பிக் கடை
இல.4 நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

# பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்ட அரசு - புலிகள் தரப்பு பிரதிநிதிகளை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு!

(கொழும்பு)

**சுனாமி ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண சபை உடன் படிக்கையில் கைச்சாத்திட்ட அரசாங்க தரப்பு பிரதிநிதிகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளையும் நீதி மன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

அரசும் விடுதலைப் புலிகளும் பொதுக் கட்டமைப்பால் இணக்கம் கண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தென்னிலங்கையில் இனவாதக் கட்சிகள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தன.

ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் மனுத்தாக்கலுக்கு அமையவே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஆழிப்பேரலை நிவாரண சபை உடன் படிக்கையில் கைச்சாத்திட்ட ஜனாதிபதியின் செயலாளர் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தின் பணிப்பாளர் மற்றும் நிதியமைச்சின் செயலாளருக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆழிப்பேரலை நிவாரண சபை ஆவணத்திற்கும் பிரதிவாதிகள் கைச்சாத்திட்ட ஆவணத்திற்குமிடையே வித்தியாசங்கள் இருப்பதாகவும், அதனால் கைச்சாத்திடப்பட்ட உண்மையான ஆவணத்தின் உண்மையான பிரதியை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்குமாறும் ஜே.வி.பி. மற்றும் தேசிய பிக்கு முன்னணி என்பவற்றின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.எம். சுமதிபால வேண்டுகோள் விடுத்தார்.

இவரது வேண்டுகோளை ஏற்ற கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் எதிர்வரும் 20 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் சூடு குடும்பஸ்தர் பலி;

(திருகோணமலை)

திருகோணமலை கிண்ணியா - புதுக் குடியிருப்பில் நேற்று முன்தினம் அதிகாலை இனந்தெரியாத குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஒன்பது பிள்ளைகளின் தந்தையான மொகமட் ஹுசைன் சஜீன் (வயது 35) என்பவரே பலியானவராவார்.

பிரஸ்தாப நபர் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவேளை இச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை கொழும்பு ஜெம்பட்டா வீதியில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு நிதியம்: விரைவில் உருவாக்கப்படும்

### சர்வதேச நிதி நிறுவனங்கள் கொழும்பில் ஆராய்வு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு நிதியம் தொடர்பாக சர்வதேச நிதி நிறுவனங்கள் தீவிர ஆலோசனை நடத்திவருகின்றன.

கடந்த புதன்கிழமை உலக வங்கியின் கொழும்பு அலுவலகத்தில் இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் உலக வங்கி ஐ.எம்.எவ். ஜப்பானிய வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

பொதுக்கட்டமைப்பு நிதியத்தை இலங்கையின் திறைசேரி மூலம் செயல்படுத்துவது குறித்தும் அதில் உள்ள சிக்கல்கள் குறித்தும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. இந் நிதியத்தை உலக வங்கியானது தன் பொறுப்பில் வைத்திருக்க விரும்புவதாக கூறப்படுகிறது. இந் நிலையில் பொதுக்கட்டமைப்புக்கான சர்வதேச பார்வையாளர்கள் நியமனம் தொடர்பாக பரிந்துரையை ஆசிய அபிவிருத்தி வங்கி அளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை நிதியம் மற்றும் சர்வதேச பார்வையாளர்கள் குறித்த இறுதி முடிவுகள் எதிர்வரும் கிழமைக்குள் இறுதி முடிவு செய்யப்படக்கூடும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

## பொதுக்கட்டமைப்பால் தனித்தரப்பு முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டம்!

(மட்டக்களப்பு)

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி நேற்று கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

முற்பகல் அனைத்துப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியமும் தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகமும் இணைந்து பல்கலைக்கழக முன்றலில் யூலை எழுச்சிப் பிரகடனம் ஒன்றையும் இது தொடர்பாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சியிலிருந்து எம்.பிக்களை வெளியேற்றியமை தவறானது!

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு!

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மூன்று உறுப்பினர்களை கட்சியிலிருந்து வெளியேற்றியமை சட்டத்திற்கு முரணானது என உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

பிரஸ்தாப நாடாளுமன்ற உறுப்பினர்களை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் வெளியேற்றியமை சட்டத்திற்கு புறம்பானது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீனை பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு பாராளுமன்ற பொதுச் செயலாளருக்கு அறிவித்தமை சட்டத்திற்கு புறம்பானது. அதேபோன்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அலி (12 ஆம் பக்கம் பார்க்க)

## எஸ்.பிக்கு பொதுமன்னிப்பு ஜனாதிபதி சந்திரிகா முடிவு?

நீதிமன்றத்தினை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் இரண்டு வருட சிறைத்தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான எஸ்.பி. திஸநாயக்கவை பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்வது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பரிசீலித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எஸ்.பி. திஸநாயக்க தொடர்பான ஆவணங்களை ஜனாதிபதி சில தினங்களுக்கு முன்னர் பார்வையிட்டுள்ளதுடன் நிபந்தனையின் அடிப்படையில் அவரை விடுதலை செய்ய அவர் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தெற்கின் புனரமைப்பு பின்னடைவுக்கு அரச அதிகாரிகளே காரணமாகும்

## வட- கிழக்கின் அபிவிருத்தியை மெச்சுகிறார் அமைச்சர் ஜெயராஜ்

(கொழும்பு)

சுனாமி புனரமைப்பு நடவடிக்கைகள் தெற்கில் உரிய முறையில் நிறைவேற்றப்படாமைக்கு அரச அதிகாரிகளின் செயற்பாடுகளே காரணமாகுமென வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

சுனாமிப் புனரமைப்பு நடவடிக்கையின் போது அதிகாரிகள் மீது நம்பிக்கை வைத்து செயற்படுவது அரசாங்கம் மேற்கொண்ட பாரிய தவறாகும். இதனாலேயே அதிகாரிகள் அக்கறையின்றிச் செயற்படுகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில், எமது அரசாங்கம் பாரிய தவறு ஒன்றினைச் செய்துள்ளது. அதாவது இந்த அதிகாரிகள் மீது அரசும் ஜனாதிபதியும் நம்பிக்கை வைத்து சுனாமி புனரமைப்பு, மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒப்படைத்தார். அந்த நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது.

இந்தச் செயற்பாடுகளுக்கு அதிகாரிகளின் பணியே முழுமையாக அமைந்தது.

ஆனால், இந்த அதிகாரத் தன்மை வடகிழக்கில் இல்லை. சுனாமிக் கட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டபோது எனக்குத் தெரியும். தெற்கைவிட வடக்கு-கிழக்கில் வீடுகள் நிர்மாணிக்கப்படுமென்று தெற்கைப் போல் வடகிழக்கில் அதிகாரத் தன்மையில்லை. அங்கு அதிகாரிகளினால் கருத்துக்கள் வெளிவிட முடியாது.

அங்குள்ள அதிகாரிகள் அரசியல் நிர்வாகத்திற்கு எதிராகச் செயற்பட்டால் அங்கு வேலைத் திட்டங்களை நிறைவேற்றாவிட்டால் அவர்களின் மண்டை ஓடு சிதைவடைந்து செல்லும் வகையில் வெடி வைக்கப்படும்.

அதிகாரிகள் மாவட்டச் செயலாளர்களாக இருக்கலாம், கிராம சேவையாளராக இருக்கலாம், சமுர்த்தி உத்தியோகத்தராக இருக்கலாம். தவறு இழைத்தால் அவர்களுக்கு உடனேயே தண்டனை கிடைத்து விடுகிறது.

இந் நிலைமையில் கட்டுப்பாட்டிலேயே வடக்கு-கிழக்கில் அதிகாரிகள் செயற்படுகிறார்கள். இதனால் வேலைத்திட்டங்கள் வடகிழக்கில் வெற்றிகரமாக நடைபெறுகின்றன. ஆனால் அவ்வாறு தெற்கில் இல்லாததினால்தான் அதிகாரிகள் எமக்குப் பூச்சாண்டி காட்டுகின்றார்கள் என்றும் தெரிவித்தார். (ற-8)

# விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்

## -சேகு இஸ்ஸதீன்

(அம்பாறை)

முஸ்லிம்கள் அரசாங்கத்துடன் இணைந்து இருப்பதால் அவர்கள் மூன்றாம்தரப்பாக பொதுக் கட்டமைப்பில் கையொப்பமிடத் தேவையில்லையெனத் தமிழ்த் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

அவர்களின் இந்தக் கருத்து நம்பக்கூடியதாக இருக்குமானால் தமது பதவிகளைத் திறந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படத் தயாராக விருப்பதாக ஊடகத்துறைப் பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களுடன் கலந்துரையாடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம் தரப்பினரை ஒரு தரப்பாக அங்கீகரிக்காத நிலைப்பாட்டில் இருந்து மாறும் நாள் விரைவில் உருவாகுமென நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து விலகுவதாகப் பயமுறுத்தியிருக்குமானால் வடக்கு-கிழக்கின் முஸ்லிம் சமூகத்தினர் இன்றைய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கமாட்டார்கள்.

முஸ்லிம்களைத் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு சமூகமாக ஏற்றுக்கொண்டு பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பதாரர்களாக ஏற்றுக்கொள்வார்களாக இருந்தால் அவர்களின் குகைகளுக்குள் சென்று தமிழீழ மாநிலத்தின் நிரந்தர அமைதிகளாக உழைக்க நாம் தயாராகவுள்ளோம் என விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)


**சிறுவிளம்பரம்**

**மலயாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வ்வாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

**ஹோட்டல் பிள்ளையார் இன்**
**அறை இல.09,**
**31, மானிப்பாய் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 0779122836**
**நேரம் காலை 9.00 -**
(9567) **இரவு 8.30 வரை**

**சித்தவைத்தியம்**

**இருதயநோய், நீரிழிவு, நரம்புத் தளர்ச்சி, முட்டு, தொய்வு, சிறுநீரக நோய், சிறுநீரகக்கல், ஆண்பெண்பாலியல் குறைபாடு, குழந்தைநோய், 'சோரியா சிஸ்' வெண்புள்ளி, எக்சிமா போன்ற தோல் நோய்கள் மற்றும் முறிவுநோ என்பவற்றிற்கு சித்தா மருந்துகள். தலைமயிர் வளர எண்ணெய் மற்றும் நோய்களுக்கு சகலவிதமான எண்ணெய் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். டாக்டர் பாலசுப்பிரமணியம் அவர்களை 1.7.2005 - 5.7.2005 வரைக்கும் இங்கு சந்தித்து வைத்திய ஆலோசனை பெறலாம்.**

சித்தவைத்திய ஆராய்ச்சி நிலையம்
(9719) பெரியமதவடி சுன்னாகம்.


# இராசி பலன்

**02.07.2005**
**(ஆனி 18, சனிக்கிழமை)**
**ஏகாதசி பிற்பகல் 2.23 மணிவரை**
**பரணி முற்பகல் 11.04 மணிவரை**
**இராகுகாலம் 8.56 - 10.26 மணிவரை**
**சுபநேரம் 02.56 - 04.26 மணிவரை**
**மரண யோகம்**

- **மேடம்**: தனதானிய சேர்க்கை, குடும்பசுகம், தொழில்வருமானம், முயற்சி பலிதம்.
- **இடபம்**: சோம்பல்நிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், உஷ்ணவியாதி.
- **மிதுனம்**: அபகீர்த்தி, புதிய திட்டமடல், வேலைச் சுமை, குடும்பக்கவலை.
- **கடகம்**: மனோ தைரியம், களஸ்திரநன்மை, செய் தொழில்விருத்தி, நல்லவருமானம்.
- **சிங்கம்**: சரீரபீடை, பொருள்விரயம், வாகனபயம், வாக்குமேன்மை.
- **கன்னி**: பிரபுத்தனம், நன்கொடை, தொழில் முன்னேற்றம், புதியசிந்தை.
- **துலாம்**: நண்பர்கள் உதவி, தனலாபம், சுபநிகழ்வு, முயற்சி கைகூடும்.
- **விருச்சிகம்**: இனிய சம்பவம், உறவினர் வருகை, விருந்துபசாரம், தொழில்நன்மை.
- **தனுசு**: ரோகபயம், முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம், தனவிரயம்.
- **மகரம்**: தாழ்ந்த சுபாவம், எடுத்தகாரியம் தாமதமாகும், பணத்தட்டுப்பாடு, திடீர்நன்மை.
- **கும்பம்**: கற்பனை மிகுதி, சயனசுகம், வெகுமானம், செல்வாக்கு.
- **மீனம்**: வீண்விவாதம், காரிய தாமதம், செய் தொழில் நன்மை, பணவிரயம்.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

**- வளவன்**

## சுனாமியால் பாதிக்கப்பட்ட
# சிறுவர் நலன்களை அதிகரிக்க நீதியமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக நீதியமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

இதனை முன்னிட்டு இடம்பெயர்ந்த சிறுவர்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 18 வயதிற்குக் குறைந்தவர்களின் பாதுகாவலர்களைப் பதிவு செய்வதற்கும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பாதுகாவலர்கள் நன்நடத்தை மற்றும் சிறுவர்பாதுகாப்புச் சபைத் திணைக்களத்தில் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பூரண விபரங்களுடன் பதிவு செய்யவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

பெற்றோர் இருவரையுமோ அல்லது அவர்களில் ஒருவரையோ இழந்த சிறுவர்களைப் பொறுப்பேற்றுள்ள அனைத்து ஸ்தாபனங்கள், அமைப்புக்கள் அல்லது உறவினர்கள் எவ்வாறு பதிவு செய்யவேண்டும்? என்பது குறித்து நீதியமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

சுனாமி விசேட ஒழுங்குகள் சட்டமூலத்தில் 16 ஆவது சரத்திற்கு அமைய சிறுவர் பதிவு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-2)

# ஜனாதிபதித் தேர்தலை வலியுறுத்தி ஐ.தே.கவினர் மாபெரும் பேரணி

(கொழும்பு)

உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடாத்துமாறு வலியுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சி இன்று முதல் நாடளாவிய ரீதியில் மாபெரும் பேரணிகளை நடாத்தவுள்ளது.

தெவின்துறையில் ஆரம்பிக்கப்படவுள்ள முதலாவது பேரணி 11 நாட்களில் கொழும்புக்கு வந்து லிப்ரன் சுற்றுவட்டத்தின் பாரிய பொதுக் கூட்டத்துடன் முடிவடையவுள்ளது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார்.

இதேவேளை, இப்பேரணியில் பத்து இலட்சம் பேரைத் திரட்டுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டிருப்பதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ற-4)

# நோபல் பரிசுக்கான பரிந்துரைப் பட்டியலில் தமிழீழ விடுதலை ஆதரவாளரின் பெயரும்!

(சென்னை)

நோபல் பரிசிற்கான பரிந்துரைப் பட்டியலில் தமிழின உணர்வாளரும், தமிழீழ விடுதலை ஆதரவாளரும், தமிழ் நாட்டு அன்னையர் முன்னணி அமைப்பாளருமான பேராசிரியர் சரஸ்வதி அம்மையாரின் பெயரும் இடம்பெற்றுள்ளது.

சென்னையில் வசித்து வரும் பேராசிரியர் சரஸ்வதி, தமிழ் நாட்டில் மூத்த பெண்ணிய வாதியாவார்.

கடந்த 25 ஆண்டுகாலமாக இவர் பெண் உரிமைக்கான போராட்டங்களைத் தமிழ் நாட்டில் முன்னெடுத்துச் சென்றவர். பெண் உரிமையும், ஒரு மனித உரிமையே என்ற முழக்கத்தினை முன்வைத்து பெண்ணிய இயக்கங்களில் இன்றளவும் தீவிரப் பங்காற்றி வருகிறார்.

அரச கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றியபோதும் பொலிஸாரின் வன்முறைகளுக்கு எதிராகவும், சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் செயற்பட்டவர். இவர் இதற்காக அரசின் நடவடிக்கைகளுக்கும் உள்ளானார். ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மாணவிகளின் கல்வி தடைப்படாமல் அவர்களது கல்விக்காலம் முழுமையடையத் தனது பேராசிரியர் பணிக்காலத்தில் பாரிய ஒத்துழைப்பினையும் வழிகாட்டுதல்களையும் அழித்து உறுதுணையாக நின்றவர் இவர்.

தமிழ் நாட்டில் தாய்த்தமிழ் தொடக்கப்பள்ளிகளை உருவாக்குவதில் தீவிரபங்காற்றியவர் பேராசிரியர் சரஸ்வதி அம்மையாரின் கணவர் விடுதலை இராஜேந்திரன் தந்தை பெரியார் திராடவிடக் கழகப்பொதுச் செயலாளர் ஆவார்.

1980களிலிருந்து தமிழீழ விடுதலைக்கு உறுதியான ஆதரவினை அவரது கணவரும் அளித்து வருகிறார்.

இந்திய அரசால் தளபதி கேணல் கிட்டு உட்படப் பத்து வேங்கைகள் கொல்லப்பட்ட போது இந்திய அரசிற்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்புவதற்காகப் பேராசிரியர் சரஸ்வதி கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-4)

# கட்டமைப்பு செயற்பாடு தாமதம் வட-கிழக்கு தமிழர் கொந்தளிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதில் தாமதமேற்பட்டு வருவது வடக்கு-கிழக்கு வாழ் தமிழர்களிடத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகின்றது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

பொதுக்கட்டமைப்புக் கைச்சாத்திடப்பட்டு 5 நாளாகியும் இன மதத்திற்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவில்லையெனக் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் இது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதிருப்தி பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான பைலா கருத்துத் தெரிவிக்கையில், அரசில் பங்கேற்றுள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படுத்தப்பட்டு அதன் பின்னர் முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவர் என்று தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும் முஸ்லிம்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் பொதுக்கட்டமைப்பில் சில திருத்தங்களை மேற்கொள்ளவேண்டியது அவசியம் அதனால் இந்தப் பொதுக்கட்டமைப்பை உடனே செயற்படுத்த வேண்டியது இல்லையென்று தெரிவித்துள்ளார். (அ-9)

# முட்டாள் தனத்தை விளக்கும் அதாவுல்லா

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்காக பதவிகளைத் தூக்கி எறிந்துவிட்டு அரசிலிருந்து வெளியேறக் கோருவது முட்டாள்தனமான கோரிக்கையெனவும் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்க உள்ளிருந்தே போராடவேண்டியது அவசியமெனவும் கிழக்குமாகாண அபிவிருத்தி உட்கட்டமைப்பு அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

இரண்டு சாதாரண அதிகாரிகளுக்கிடையிலான இந்த ஒப்பந்தத்தினால் முஸ்லிம் சமூகத்தின் ஒட்டுமொத்த உரிமைகளும் பறிக்கப்பட்டுள்ளதாகக் கருதிவிடக்கூடாது எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# கடற்றொழிலாளர்களின் பிரச்சினை குறித்து மாவட்டக் குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட கடற்றொழிற்திணைக் களத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு உதவிகளைச் செய்து வருகின்ற, உதவிகளை செய்யஇருக்கின்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கடற்றொழில் சங்கங்கள், சமாசங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்குவதன் முன்னேற்றங்கள் நியாப் திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற உதவிகள் தொடர்பான வேலைத் திட்டங்களை துரிதப்படுத்தி சுனாமினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீள்நிர்மாணம் செய்வதோடு, சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரும் மிகவிரைவில் முழுமையான மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவதற்கு ஏற்றவகையில் கடற்றொழில் சங்கங்களும் சமாசங்களும் துரிதமாகச் செயற்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் முழுமையாகத் தமது மீன்பிடித் தொழிலில் ஈடுபடவில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவக்குடும்பங்களுக்கு பல அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவிகளை மேற்கொண்டு வருகின்ற வேளையிலும் இவ் உதவிகள் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை.

இதனால், உதவிகளைப் பெறாத கடற்றொழிலாளர்கள் இன்றும் தமது கடற்றொழிலில் ஈடுபடவில்லையெனவும் இதில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், யாழ்.மாவட்டத்தில் குருநகர், வடமராட்சி, ஆனைக்கோட்டை, காரைநகர், வட்டுக்கோட்டை, நாயன்மார்க்கட்டு ஆகிய 6 இடங்களிலும் வள்ளங்கள் செய்யும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் வேலைப்பாடுகளை துரிதப்படுத்தல் தொடர்பாகவும் அக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும், மீன்பிடித் தொழிலை மேற்கொள்பவர்கள் தாம் பிடிக்கின்ற மீன்களைச் சந்தைப்படுத்துதல் தொடர்பாக அதாவது தற்போது முழுமையாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடாததினால் குறைந்தளவு மீன்கள் பிடிக்கப்படுவதினால் தற்போது சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினை ஏற்படவில்லை எனவும் எதிர்காலத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து மீன்பிடித் தொழிலாளர்களும் உதவிகளைப் பெற்று முழுமையான மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் பட்சத்தில் அவர்களால் பிடிக்கப்படுகின்ற மீன்களைச் சந்தைப்படுத்துகின்ற வசதிகளை கடற்றொழில் சங்கங்கள், சமாசங்கள் ஏற்படுத்திக் கொடுப்பதன் அவசியம் குறித்தும் இக்கூட்டத்தில் மேலும் வலியுறுத்தப்பட்டது.

(ர-19)

## யாழ்.மத்திய கல்லூரி திங்களன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி எதிர்வரும் 4ஆம் திகதி திங்களன்று மீண்டும் இரண்டாம் தவணையின் மீதிக்கால நடவடிக்கைகளுக்காக தொடங்கவுள்ளது.

க.பொ.த.உயர்தரப்பரீட்சைகள் முடிவடைந்து சகல பாடசாலைகளும் திறக்கப்படும்போது யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியும் திறக்கப்படநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பரீட்சை விடைத்தாள்களில் மதிப்பீட்டு வேலைகளில் பெருமளவு முடிவடைந்துள்ளன. மதிப்பீட்டு வேலைகள் நடைபெற்றாலும் அதே நேரம் கல்லூரியும் தொடர்ந்து இயங்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

எனவே, ஆசிரியர்களும், மாணவர்களும் திங்களன்று கல்லூரிக்கு சமுகமளிக்க வேண்டுமெனக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.(அ)

## தாதிய உத்தியோகத்தர்கள் இருவர் நியமனம்

(சுதுமலை)

யாழ்.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பிரிவுக்கு இரு பொதுச்சுகாதார தாதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி, இரு பொதுச் சுகாதார தாதிய உத்தியோகத்தர்களுக்கும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும், கோப்பாய் சுற்றயல் கூறு வைத்தியசாலைக்கும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ வரன் நியமனம் வழங்கியுள்ளார்.

தாய் சேய் நலச்செயற்பாடுகள், வைத்தியசாலைப் பிரசவங்கள் போன்றவற்றை மேற்பார்வை செய்வது போன்ற விடயங்களில் இவர்கள் பொறுப்பாக இருப்பார்கள் எனவும் பல வருடங்களாக யாழ். மாவட்டத்திற்கு எவரும் நிய மிக்கப்படவில்லை என்பதால் வெற்றிடங்கள் பல பிரிவுகளில் உள்ளதாகவும் அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ர-252)

# பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இன்று சேது சமுத்திரத் திட்டம் ஆரம்பம்

(மதுரை)

மதுரையில் சேதுசமுத்திரத் திட்டத்தின் தொடக்கவிழா இன்று நடத்தப்படவுள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உட்பட முக்கிய தலைவர்கள் இதில பங்கேற்கவுள்ளதால் பலத்த பொலிஸ்பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தமிழீழமக்களின் நீண்டநாள் கோரிக்கையான சேதுசமுத்திரத் திட்டப்பணிகள் இன்று தொடங்குகிறது.

ரூபா 2 ஆயிரத்து 427 கோடி செலவில் நடக்கும் இத்திட்டப் பணியை மதுரை மஸ்தான் பட்டியில் இருந்து மாலை 4.00க்கு நடக்கும் பிரமாண்டவிழாவில் பிரதமர் மன்மோகன் சிங் தொடக்கி வைப்பார்.

பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தி ஆகியோர் தனி விமானம் மூலம் இன்று மாலை 3.20 மணிக்கு மதுரை சென்று அங்கிருநது குண்டு துளைக்காத காரில் விழா மேடைக்குச் செல்லவுள்ளார்.

விழாவிற்குத் தேசிய ஆலோசனைக் குழுத்தலைவர் சோனியா முன்னிலை வகிக்கிறார். மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு தலைமை வகிக்கிறார்.

தமிழக கவர்னர் சுர்ஜித் சிங் தர்னாலா, தி.மு.க.தலைவர் கருணாநிதி இதில் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர். சிறப்பு விருந்தினர்களாக தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களும், சிறப்பு அழைப்பாளர்களாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தமிழகக் கூட்டணிக் கட்சித் தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர்.

விழாவையொட்டி கடுமையான பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பிரதமர் பாதுகாப்புக்காக குண்டு துளைக்காத 6 கார்கள் நேற்று முன்தினம் மதுரைக்கு கொண்டு வரப்பட்டன. விழாப் பகுதிகள் அனைத்து சுழல் கமராக்கள் மூலம் கண்காணிக்கப்படுகின்றது.

பத்து வாகனங்களில் வெடிகுண்டு தடுப்புப் பிரிவு பொலிஸார் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். பிரதமர் பேசவிருக்கும் மேடை, மேடையின் பின்புறம் அமைக்கப்பட்டுள்ள ஓய்வறைகள், மேடையின் முன்புறமுள்ள குறிப்பிட்ட சில அடிதூர பகுதிகள் மத்திய பாதுகாப்புப் படை ஐ.ஜி. ராமச்சந்திரன், ஏ.ஐ.ஜிக்கள், ஆசிம் அருள் சஞ்சை குமார் தலைமையில் 24 பேர் கொண்ட மத்திய அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் கண்காணிக்கப்படும்.

திட்டத்தை பிரதமர் தொடக்கி வைக்கும் அதேநேரத்தில் கோடியக் கரையில் கடலைத் தோண்டும் பணிகள் ஆரம்பமாகும். இதனை விழா நடக்குமிடத்தில் நேரடி ஒளிபரப்பு செய்ய தூர்தர்சன் விஷேட ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இதற்காக டவர் அமைக்கப்பட்டுள்ளது. தொடக்க விழாவிற்கான ஏற்பாடுகளை சேதுசமுத்திர கார்ப்பரேசன் செய்துள்ளது. (ற)

## தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் மற்றும் விளையாட்டுத்துறை ஆகியோரின் அனுசரணையுடன் கோணடாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில்,

இன்று சனிக்கிழமை மாலை 4.00 மணிக்குக் கைதடி குமாரநகர் அணியை எதிர்த்து இணுவில் அண்ணா அணியும் மாலை 5.00 மணிக்குக் கைதடி துர்க்கா அணியை எதிர்த்து மானிப்பாய் ஆனந்தா அணியும் மோதவுள்ளன. (அ-9)

# பொதுக்கட்டமைப்பை எதிர்க்காத எவரும் ஜனாதிபதியாக முடியாது - விமல்வீரவன்ஸ

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்தவர்கள் எவரும் பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தத்தை ஆதரிக்க முடியாது. பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பவர்கள் அரசாங்கத்தில் இருந்தால் அரசை விட்டு உடனடியாக வெளியேறுங்கள் எனப் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத்தலைவர்களில் ஒருவரும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்புக் குறித்து மக்கள் தெளிவாக விளங்கி வைத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் ஜனாதிபதியும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நாட்டை விற்றுவிடுவார்கள்.

பொதுக்கட்டமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைவிடவும் பயங்கரமானது.புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட அரசாங்கத்தை மக்கள் வீட்டுக்கு அனுப்பியது போல பொதுக்கட்டமைப்புக் கைச்சாத்திட்ட அரசாங்கத்தை மக்கள் அடுத்த தேர்தலின் போது வெளியேற்ற வேண்டும்.

புலிகளின் மாவீரர் தினத்தன்று வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்றும் உரையின் இறுதியில் தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம் என்பார். இதற்கு ஜனாதிபதி சந்திரிகா தண்ணீர் ஊற்றியுள்ளார்.

ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்துவிட்டுத் தனது பதவியிலிருந்து விலக முயற்சி செய்கிறார்.

இந் நிலையில் பொதுக்கட்டமைப்புக் குறித்து ஐ.தே.க. நிலைப்பாடு என்ன? பொதுக்கட்டமைப்புக்கு எதிராக குரல்கொடுக்காத எவரும் ஜனாதிபதியாகமுடியாது.

இவ்வாறு கனவு கண்டுகொண்டிருப்பவர்களுக்கு மக்கள் தகுந்த பதில் வழங்குவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# ஜனாதிபதியின் வாழ்க்கை வரலாறு நூல் எதிர்வரும் 17இல் கொழும்பில் வெளியீடு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வாழ்க்கை வரலாறு எதிர்வரும் 17 ஆம் திகதி நூலுருவில் வெளியிடப்படவுள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனிப் பிளேயர், முன்னாள் பிரதமர் மார்க்கிரட் தட்சர் உட்பட பல உலகத் தலைவர்களது வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ள கிராமி வில்சன் எழுதியுள்ள இவ் வாழ்க்கை வரலாற்றில் ஜனாதிபதி தனது பாடசாலை நண்பர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்படப் பலரைப் பற்றியும் தனது எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் 17 ஆம் திகதி வெளியிட்டு வைக்கப்படவுள்ள இந் நூலினை எழுதியுள்ள கிராமி வில்சன் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினார்.

ஜனாதிபதி தனது இந்த வாழ்க்கை வரலாற்றில் அரசியல் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை அனுபவங்கள் பற்றித் தெரிவித்திருப்பதாகவும் இந் நூலில் அவரது தந்தையாரான முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் படுகொலை, கணவரான குமாரதுங்கவின் படுகொலை மற்றும் தனக்கு சிறுவயதில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் தனது பாடசாலை நண்பர்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உட்படப் பலரைப் பற்றியும் கருத்துத் தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிட்டார்.

சி.பி.கே.எனப்பெயரிடப்பட்டுள்ள இந்த வாழ்க்கை வரலாற்று நூல் கொழும்பில் வெளியிடப்பட்டுள்ள பின்னர் அமெரிக்கா, லண்டன், கனடா மற்றும் யப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

முதற்கட்டமாக நூலின் ஒரு இலட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

இந் நூல் விற்பனை மூலம் கிடைக்கும் இலாபம் முழுவதும் கடல்கோள் அனர்த்த நிவாரண நிதியத்திற்கு வழங்கப்படவுள்ளது.

நூலின் விலை 60 டொலர்களாகும் (6 ஆயிரம் ரூபா) எனவே சுமார் 20 கோடி ரூபா கடல்கோள் அனர்த்த நிவாரண நிதிக்கு வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, 35 வயதான இந நூலாசிரியர், ரொனிப்பிளேயர் , மாக்கிரஸ் தட்சர் உட்பட 12ற்கும் அதிகமான உலகத் தலைவர்களினது வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளதுடன் அமெரிக்க உலக வர்த்தக மையம் மீதான செப்ரம்பர் -11 தாக்குதல் குறித்தும் பல நூல்களை எழுதியுள்ளார்.

125 ஆயிரம் வார்த்தைகளைக் கொண்ட இந்தப் புத்தகத்தின் நூற்றுக்கும் அதிகமான வர்ணப் புகைப்படங்களும் அடங்கியுள்ளன. (ற)

## அலுமினியப் பாத்திரப் பாவனை சிறுநீரக நோய்க்கு காரணமாகலாம்

(கொழும்பு)

வடமத்திய மாகாண மக்களை மட்பாண்ட பாவனைக்கு உட்படுத்துவது தொடர்பான வேலைத்திட்டமொன்று தேசிய ஐக்கிய அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மாகாணத்தில் சிறுநீரக நோய் பரவிவருவதைத் தடுக்கும் நோக்கிலேயே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணத்தில் பத்துப் பேரில் ஒருவருக்கு சிறுநீரக நோய்த் தாக்கம் இருப்பதாக வைத்திய ஆய்வுகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக தேசிய வைத்திய அமைச்சர் திஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

அலுமினியப் பாத்திரங்கள் சமையலுக்கும், குடிநீர் சேகரிப்புக்கும் பாவிக்கப்படுவதால் இந்த நோய்த்தாக்கம் ஏற்படுகின்றது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக மட்பாண்டங்களை அநுராதபுர மாவட்டத்தில் இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதென தேசிய வைத்திய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இது தொடர்பாக மக்களுக்குத் தெளிவு படுத்துவதற்கு ஆயுர்வேத சுகாதார சேவை நடவடிக்கை எடுத்துள்ளது. (அ-2)

## இன்று ஒரு தகவல்

# நினைப்பதும் நடப்பதும்

ஒரு ஆள் இருந்தான். நிறையப்பேர் அவனைத்தேடி வந்து கொண்டிருந்தார்கள். அந்தளவிற்கு அவன் ஒரு பெரிய மனிதன் என்று நினைக்கிறீர்களா? அப்படி இல்லை. எல்லோரிடமும் கடன் வாங்கிவிட்டான் சார். கடன் கொடுத்தவர்கள் சும்மா இருப்பார்களா? தேடிவர ஆரம்பித்துவிட்டார்கள். பணம் தேவைப்பட்ட போதெல்லாம் அவன் கடன்வாங்கினான். கடனைத் திருப்பிக் கொடுக்கும்வகையில் அந்தப் பணத்தை வைத்து ஏதாவது தொழில் செய்யவேண்டும் அல்லவா? செய்யவில்லை! சும்மா இருந்துவிட்டான். வாங்கிய பணத்தை செலவு செய்தான். அது தீர்ந்து போனதும் மறுபடியும் கடன் வாங்கினான். செலவு செய்தான். கடன் அதிகமாகிவிட்டது.

கடன் கொடுத்தவர்கள் எல்லாம் அடிக்கடி வந்து அவனைத் தொந்தரவுசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள். கடனை இவனால் திருப்பிக்கொடுக்க முடியாது. ஆனால் கடன் கொடுத்தவர்களின் தொல்லையோ நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டேவந்தது. இந்தப் பிரச்சினையிலிருந்து தப்பிக் கொள்வது எப்படி என்று யோசனைசெய்து ஒருவழியைக் கண்டுபிடித்தான். பைத்தியம் பிடித்த மாதிரி பாசாங்கு செய்ய ஆரம்பித்துவிட்டான். எல்லோரும் அதை நிஜம் என்றே நம்ப ஆரம்பித்துவிட்டனர். ஆள் உண்மையிலேயே பைத்தியக்காரன் ஆகிவிட்டான். ஏதாவது செய்தாக வேண்டுமென்று உறவினர்கள் முடிவு செய்தனர். வைத்தியர்களை அழைத்து வந்து காட்டினார்கள்.

வைத்தியர்களும் ஒவ்வொருவராக வந்தனர். அவனைப் பார்த்தார்கள். மருந்தும் கொடுத்துவிட்டுப் போனார்கள். மருந்து கொடுக்கக் கொடுக்க அவன் இன்னும் வேஷம் போட ஆரம்பித்துவிட்டான். கேஸ் வர வர முற்றிக்கொண்டிருப்பது போல தெரிந்தது பார்ப்பவர்களுக்கு!

அந்த வைத்தியர் சரியில்லை. இந்த வைத்தியர் சரியில்லை என்று நினைத்து புதிது புதிதாக வைத்தியர்களை அழைத்துக்கொண்டுவர ஆரம்பித்தார்கள் உறவினர்கள். எதிலும் அவன் சரியாவதுபோல் தெரியவில்லை. நடிப்பதில் அவன் உறுதியாக இருந்தான். அவ்வளவு கடன்வாங்கத் தெரிந்தவனுக்கு இதுகூடவா தெரியாது? பிரமாதமாக நடித்தான்.

கடைசியாக ஒரு வைத்தியர் வந்தார். நிறைய அனுபவம் உள்ளவர் அறிவாளி. இவனைப் பரிசோதனை செய்தார். கையைப்பிடித்துப் பார்த்தார். நாக்கை நீட்டச் சொன்னார். அவன் முகத்தைக் கவனித்துப்பார்த்தார். இவனுக்கு உண்மையிலேயே பைத்தியம் இல்லை. இவன் நடிக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டார். உடனே அவனை "என்னுடன்வா" என்று கூறி ஒரு தனி அறைக்குள் அழைத்துப்போனார். "இதோ பார் நீ இப்படிச் செய்வது சரியில்லை! நீண்டநாள் நீ இதே மாதிரி பாசாங்கு செய்துகொண்டிருந்தால் உனக்கு உண்மையிலேயே பைத்தியம் பிடித்துவிடும். இப்போதே அதற்கான ஆரம்ப அறிகுறிகள் உன்னிடம் தெரிகின்றது. அதனால் கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது" என்றார்.

இதைக்கேட்டதும் அந்த ஆள் உண்மையாகவே மிகவும் பயந்துபோய்விட்டான். நிதானமாக யோசித்துப்பார்த்தான். வைத்தியர் சொன்னது நியாயமாகத் தெரிந்தது. தன் மனது லேசாக மாற்றமடைந்திருப்பதுபோல் தெரிந்தது. 'ஆகா ஏமாந்து போய் விட்டோம் என்பதைப் புரிந்துகொண்டான். அந்த நிமிடமே அவன் பாசாங்கு செய்வதை நிறுத்தினான்.

பகவான் இராமகிருஷ்ணர் சொன்னகதை இது. இந்தக்கதையைச் சொல்லிவிட்டு அவர் என்ன சொல்கிறார் என்றால் 'இடைவிடாமல் நீ எப்படி இருப்பதாகக் காட்டிக்கொள்கிறாயோ அப்படியே ஆகிவிடுவாய் அதனால் நல்லவனாக இருப்பதாக நீ நினைத்தால்கூட நீ நல்லவனாக ஆகிவிடமுடியும்" என்கிறார். அதனால் நாமெல்லாம் வாழ்க்கையில் நடிக்க வேண்டும் என்றால்கூட நல்லவனாக நடிப்பதற்கு முயற்சிப்பது நல்லது.

நமது ஆள் ஒருவன் இந்தக்கதையில் வருவதுபோலவே நிறைய கடன் வாங்கிவிட்டு பைத்தியக்காரன் மாதிரி நடிக்க ஆரம்பித்துவிட்டான். அது உண்மை என்று நம்பி அவனை ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் சேர்த்தனர் உறவினர்கள். அவனைக் கொண்டுபோய் ஒரு அறைக்குள்ளே தள்ளிக் கதவை மூடிவிட்டார்கள். உள்ளே ஒரே இருட்டாக இருந்தது.

இவன் பயந்துகொண்டே ஒரு மூலையில் போய் உட்கார்ந்தான். அந்த சமயம் அங்கே இருந்த இன்னொருவன் மெதுவாக இவனது தோள்மீது கைவைத்தான். இவன் நடுங்கிப்போய் விலகி ஓடினான். "என்னைத் தொடாதே... நான் உண்மையாகவே பைத்தியம் இல்லை. ஒரு ஆளிடம் நான் நிறைய கடன் வாங்கிவிட்டேன். அவனுக்குப் பயந்துபோய் இப்படி நடிக்க ஆரம்பித்துவிட்டேன் அவ்வளவுதான்." என்றான்.

உனக்குக் கடன்கொடுத்தவன்கூட உனது தொல்லைக்குப் பயந்து பைத்தியம் மாதிரி நடிக்க ஆரம்பித்து விட்டானே அதுதெரியுமா? என்றான் அந்த ஆள். "அது எப்படி உனக்குத் தெரியும்?" என்றான் இவன். "நன்றாக என் முகத்தைக் கவனித்துப்பார். நான்தான் அந்த அப்பாவி" என்றான் அவன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ஜே.வி.பியினர் கோரிக்கை விடுக்கும்பட்சத்தில் கட்டமைப்பு ஆவணம் சபையில் சமர்ப்பிக்கப்படும்

## -அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்புக் குறித்து நாடாளுமன்றத்தில் நடைபெறவிருந்த விவாதத்தின் மூலம் உரிய பிரதிபலன்களைப் பெற ஜே.வி.பியினால் முடியாது போயுள்ளதாக மகாவலி ஆற்றுப்படுத்துகை இராஜரட்டை அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தேவையேற்படின் எதிர்க்கட்சியோ அல்லது வேறு எந்தக் குழுவோ கைச்சாத்திடப்பட்ட ஆவணம் குறித்து கோரிக்கை விடுப்பார்களாயின் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கமுடியும்.

கட்சித்தலைவர்களின் கூட்டத்தின்போதும் இவ்வாறான விவாதத்தைக் கோரினார்கள். நாம் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கினோம். எப்போதும் ஆவணத்தை கைச்சாத்திடமுன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது அவசியமென ஜே.வி.பியினர் கூறினர். நாம் ஆவணத்தைக் கைச்சாத்திட்ட முன்னர் தான் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தோம். விவாதத்துக்கென வழங்கிய சந்தர்ப்பத்தையும் அவர்கள் பயன்படுத்தவில்லை. அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையினால் விவாதத்தை இடைநடுவில் கைவிடவேண்டியேற்பட்டது.

இதனால் எதிர்காலத்தில் எதிர்க்கட்சியோ வேறு எந்தவொரு பிரிவினரோ இதுகுறித்து விடுக்கும் கோரிக்கைக்கு அமைய அரசினால் செயற்படமுடியும். இதில் எந்தவொரு பாகுபாடும் இல்லை. அவர்கள் கோரிக்கை விடுப்பார்களாயின் கைச்சாத்திடப்பட்ட ஆவணத்தை நாடாளுமன்றத்தில் மீள சமர்ப்பிக்க முடியும் என்றும் அப்பேட்டியில் மைத்திரிபால சிறிசேன மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-8)

# தலைவரின் சிந்தனைக்கு உப்பளப்பணியாளர்கள் செயல்வடிவம் கொடுத்து வருகின்றார்கள்

## தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன்

தலைவருடைய உயரிய சிந்தனைக்கு முழுமையாக செயல்வடிவம் கொடுக்கும் வகையில் எமது உப்பளப்பணியாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள் என்று தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தின் பெண்கள் விடுதி திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

இன்று இந்த உப்பளப்பிரதேசத்திலே இந்த உப்பு உற்பத்தி நிறுவனத்தில் பணிபுரிகின்ற சகோதரிகளுக்கான ஓர் விடுதியை அமைத்துக்கொடுத்து திறந்து வைக்கும் நிகழ்விலே கலந்துகொண்டிருக்கின்றோம். இந்த விடுதியை அமைத்துக்கொடுத்திருக்கின்ற ஜி.ரி.சற் நிறுவனத்தினுடைய பிரதிநிதிகளுக்கும் அந்நிறுவனத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுடைய சார்பில் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஏனெனில், இந்த ஜி.ரி.சற் நிறுவனமானது கடந்த காலங்களில் இருந்து எங்கள் தாயகப் பிரதேசத்தில் இப்படியான சில பணிகளை செயற்படுத்தி வருவதை நாங்கள் நன்கு அறிவோம். அந்த வகையில் பல நூற்றாண்டுகளாக அந்நியப்படைகளின் கைகளில் இருந்த இந்த ஆனையிறவு பெரும் தளம் எங்கள் தேசியத் தலைவருடைய நுட்பமான வழியில் ஆயிரக்கணக்கான போராளிகளின் உயிர்த்தியாகங்களில் மீட்கப்பட்டது.

தாயகத்தின் ஒரு பெரும் வளமான இந்த ஆனையிறவு உப்பளப்பிரதேசத்தில் இன்று மீண்டும் உப்பு உற்பத்திக்கான நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்நடவடிக்கையை இன்னும் மேம்படுத்துவதற்காக ஜி.ரி.சற் போன்ற நிறுவனங்கள் இந்த நிறுவனத்திற்கு உதவிகளை வழங்கி வருகின்றன. அவற்றை எங்களுடைய பொருண்மிய மதியுரையகம் இங்கு முழுமையாகப் பயன்படுத்தி செயற்படுத்தி வருகின்றது.

எங்கள் பெரும் வளமாகத் திகழ்கின்ற இந்த உப்பு உற்பத்தியை எமது தேசியத் தலைவரின் உயரிய சிந்தனைக்கு அமைய மேலும் செயல்வடிவம் கொடுக்கும் வகையில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் திட்டங்களை வகுத்திருக்கின்றார்கள்.

அந்தவகையில் நீண்டகாலமாக இந்த உப்பளத்திலே பணியாற்றி வருகின்ற பணியாளர்கள் இங்கிருக்கின்றார்கள். அவர்கள் எங்கள் தலைவருடைய அந்த உயரிய சிந்தனைக்கு முழுமையாக செயல்வடிவம் கொடுக்கும் வகையில் பணியாற்றி வருகிறார்கள் என்றார். (அ)

# பொதுக்கட்டமைப்பை செல்லுபடியற்றதாக்க ஜாதிகஹெல உறுமய தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை செல்லுபடியற்றதாக்குவதற்காக பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜாதிகஹெல உறுமய திட்டமிட்டுள்ளது.

அரசாங்கத்தரப்பில் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நபரின் குடியுரிமையை இரத்துச்செய்யுமாறும், அடிப்படை உரிமைமீறல் என்ற வகையிலும் இரண்டு வழக்குகளை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர்கள் தீர்மானித்திருப்பதாக அக்கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்தார்.

ஆழிப் பேரலை நிவாரணசபைக்கு எதிராக ஜாதிக ஹெல உறுமய எடுக்கவுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக விளக்கமளிக்கும் வகையில் நேற்று ஒழுங்கு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ரத்ன தேரர் இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்காகப் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நாங்கள் பாரிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு எமக்குப் போதிய ஆதரவு உள்ள போதும் ஜே.வி. பி.யினரையும் இணைத்துக்கொள்ளும் முகமாக அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

# நாட்டை முன்னேற்றும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும்-பிரதமர்

(கொழும்பு)

நாட்டை முன்னேற்றுவோம் என்ற வேலைத்திட்டத்தின் காரணமாகவே கூட்டமைப்பு அரசாங்கத்தை மக்கள் ஆட்சிக்குக் கொண்டுவந்ததாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதாக பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கிலும் தேசிய கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கிலும் கூட்டமைப்பு அரசாங்கம் அமைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நிக்கவெரட்டிய வாரியபொல குடிநீர் விநியோக திட்டத்திற்கான அடிக்கல்நாட்டு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

எந்த வகையான தடைகள் தோன்றினாலும் நாட்டை முன்னேற்றுவோம் என்ற வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டமைப்பு அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் விவசாயத்துறை புத்துயிர் பெற்றுள்ளதாக பிரதமர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-9)

# சகல பாடசாலைகளுக்கும் தரமான அதிபர்களை நியமிக்க ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)


நாட்டிலுள்ள சகல அரசாங்க பாடசாலைகளுக்கும் தரம் பெற்ற அதிபர்களை நியமிக்குமாறு கல்வியமைச்சரும், ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கான சகல தகவல்களையும் மாகாண கல்விப் பணிப்பாளர்களிடமிருந்து கல்வியமைச்சு அவசரமாகக் கோரியுள்ளது. இதேவேளை, இவ்வாண்டு முடிவிற்குள் தரம்பெற்ற அதிபர்களுக்குத் தடைப்பட்டிருந்த அனைத்துப் பதவி உயர்வுகளையும் வழங்குமாறும் ஆசிரியர்களது பிரச்சினைகளைத் தீர்க்குமாறும் பணிப்புரை வழங்கப்பட்டிருக்கிறது.

2005/14ஆம் இலக்கக் கல்வியமைச்சின் சுற்றுநிருபம் மூலம் இப்பணிகளை இன்னும் மூன்று மாதத்திற்குள் பூர்த்தி செய்யுமாறு மாகாண கல்வி நிருவாகங்கள் கேட்கப்பட்டுள்ளன. (அ-9)

# முப்படைக்கான கொள்வனவு வேட்டையில் சிறிலங்கா இராணுவம்!

பிரிட்டனிடம் இருந்து சேர் கலகாட் போர்க்கல தரையிறக்க போர்க்கப் பலைக் கொள்வனவு செய்ய முப்படைத் தளபதி தயா சந்தகிரி பரிந்துரைத் துள்ளார்.



சேர் கலகாட்

சிறிலங்கா கடற்படை கொள்வனவு செய்ய குறிவைத்திருக்கும் சேர் கலகாட் கப்பலானது 16 போர் டாங்கிகள் அல்லது 33 எட்டு தொன் வாகனங்கள், 62 லான்ட் ரோவர்கள் ஆகியவற்றை கப்பலின் மேல் டெக்கில் ஏற்றும் திறன் கொண்டவை.

மேலும் 33 எட்டு தொன் வாகனங்கள் 74 லாண்ட் ரோவர்கள், 40 இருபது அடி கொண்டெய்னர்களையும் அதன் வாகன டெக் தாங்கும் திறன் கொண்டது. இதில் மேலும் 27 எட்டு தொன் வாகனங்கள், 59 லாண்ட் ரோவர்கள் மற்றும் 30 இருபது அடி கொண்டெய்னர்களையும் ஏற்றலாம்.

பிரிட்டன் சேர் கலகாட் கொள்வனவு தொடர்பில் மேமாதம் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

சிறிலங்கா கடற்படையின் உயர் நிலைக்குழு இது தொடர்பாக பிரிட்டனுககுச் சென்றது. சிறிலங்கா முப்படைத் தலைமை அதிகாரியும் கடற் படைத் தளபதியுமான தயாசந்தகிரி தலைமையில்



போக்லாண்ட் போரில் தாக்குதலுக் குள்ளாகி எரியும் கலகாட்

ரியர் அட்மிரல் இவான காரியவசம், ரியர் அட்மிரல் ஹர்சா மாயா துன்ன, ரியர் அட்மிரல் டொனி அபெசேன ஆகியோர் பிரிட்டன் சென்றவர்கள் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

இந்தக் குழு பிரிட்டனின் கடற்படையின் தரையிறக்கக் கலங்களைப் பார்வையிட்டது. கடந்த வாரம் பிரிட்டன் கடற்படையின் குழு ஒன்று சிறிலங்காவுக்கு வந்து பிரிட்டனின் 3 தரையிறக்கக் கப்பல்களை விற்பது தொடர்பாக பேச்சுக்களை நடத்தியது.

சேர் கலகாட் - எல் - 3005
சேர் பேர்சிவலே - எல் - 3036
சேர் திரிஸ்ராம் - எல் - 3505

ஆகிய தரையிறக்கக் கலங்களை விற்கவே பிரிட்டன் தரப்பினா முயற்சி மேற்கொண்டனர்.

இவற்றில் ஒன்றை அதாவது சேர் கலகாட்டை பெற சிறிலங்கா கடற்படை முயல்வதாக தெரிவிக்கப்பட்டது. சேர் கலகாட் கப்பல் பிரிட்டனினால் போக்லாண்ட் போரில் பயன்படுத்தப்பட்டது. அது கடலில் மூழ்கியது.

சேர் திரிஸ்ராம் அப்போரில் சேதமானது. திரிஸ்ராம் பின்னர் மீட்கப்பட்டு பிரிட்டன் தளத்துக்கு கொண்டு வரப்பட்டது. அது திருத்தப்பட்டு 1985இல் மீள சேவையில் அது ஈடுபடுத்தப்பட்டது.

மூழ்கிய சேர் கலகாட் கப்பலைப் போன்று புதிதாக கட்டப்பட்டது. (போக்லாந்து போர் 1982இல் நடைபெற்றது) புதிய சேர் கலகாட் 1987இல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

சேர் பேசிவலே 1968இல் இருந்து சேவையில் உள்ளது.

இவற்றில் சேர் கலகாட்டை வாங்கவே



புதிய கலகாட் தரையிறங்கும் அதன் பின்புறம்

தறபோது சிறிலங்கா படை முயறசிகளை மேற்கொண்டுள்ளது.

சேர்பியாவிடமிருந்து ரஷ்யத் தயாரிப்பு ஏவுகணைக்கப்பல்கள் இரண்டைப் பெறும் முயற்சியிலும் சிறிலங்கா கடற்படை ஈடுபட்டுள்ளது.



கலகாட்டில் இறங்கவல்ல சினூக் ஹெலிகொப்டர்

இதன் பெறுமதி 2.45 பில்லியன் ரூபாக்கள். இதற்காக சிறிலங்கா கடற்படையின் ஒரு குழு ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையில் சேர்பியாவின் சராகோவா செவிக தளத்துக்கு சென்றுள்ளது.

இந்த ஏவுகணைக்கப்பல் தரையிலிருந்து தரையைத் தாக்கும் ஏவுகணை, விமானத்தைத் தாக்கும் ஏவுகணை, நீர்மூழ்கிகளைத் தாக்கும் ஏவுகணைகளைக் கொண்டது.



கலகாட்டில் இறங்கும் வெஸ்ட்லாண்ட் சீகிங் ஹெலிகொப்டர்

சேர்பியா யூகோஸ்லாவியாவின் ஒரு குடியரசு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதைவிட உருகுவே நாட்டிடமிருந்து விஜிலன்ட் கிளாஸ் வகை அதிவேக தாக்குதல் படகுகள் மூன்றை கொள்வனவு செய்யவும் சிறிலங்கா கடற்படை முயல்கின்றது.

இவை 1980இல் பிரான்சில் கட்டப்பட்டு 1981இல் உருகுவேயிடம் கொடுக்கப்பட்டவையாகும்.

சிறிலங்கா கடற்படையின் உயர்நிலைக் குழு ஒன்று இவற்றை பார்வையிட உருகுவேயின் மொண்டிவீடியோவுககு சென்றுள்ளது.

உருகுவேயின் கடற்கலங்கள் பல நவீன வசதிகளைக் கொண்டவையாகவும இருக்கின்றன.

பிரிட்டனிடமிருந்து ஒரு தரையிறக்கக கப்பல், சேர்பியாவிடமிருந்து இரு ஏவுகணைக் கப்பல்கள் என்பவற்றை சிறிலங்கா கடற்படை கொள்வனவு செய்வதற்கான செலவில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு புனர்வாழ்வளிக்க முடி



யும் என்றும், மின்சார சபைக்கு மானியமளிக்க முடியும் என்றும் கொழும்பு அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே இஸ்ரேலிடமிருந்து கொள்வனவான ஏவுகணைக்கப்பல்கள் சிறிலங்கா கடற்படையிடம் இருக்கின்றன. 20 ஆண்டு காலம் பழைமையான இவற்றில் ஏவுகணை செலுத்திகள் பழதடைந்தவையாக இருக்கின்றன.

இவை 3ஆம் ஈழப் போர்க்காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டன. இவை கொள்வனவு செய்யப்பட்டதில் மோசடிகள் நடந்ததாக குற்றச்சாட்டு உள்ளது. இன்றும் இவை கொழும்புத் துறைமுகக் கடற்படைத் தளத்தில் நிற்கின்றன. இதுவரை இவை ஒரு ஏவுகணையைக்கூட ஏவவில்லை. இதைவிட இந்தியாவிடமிருந்து சிறிலங்கா கடற்படை கொள்வனவு செய்த சுகன்யா கிளாஸ் வகை கப்பலான எஸ்.எல்.என். எஸ் சயுர என்ற உலங்கு வானூர்தி தாங்கிக் கப்பலில் பொருத்தப்பட்டிருந்த போபர்ஸ் பீரங்கி இப்போது அமெரிக்காவிடமிருந்து பெற்ற கரேஜஸ் ஆள் கடற கண்காணிப்புக் கப்பலில் பொருத்தப்பட்டு விட்டது.

இப்போது கரேஜுக்கு எஸ்.எல்.என்.ஏஸ். சமுத்ரா என்ற பெயர் இடப்பட்டுள்ளது.



பேர்சிவலே கப்பல்

இதை அமெரிக்கா அன்பளிப்பாக கொடுத்தாலும அதன் புனரமைப்புக்கு 600 மில்லியன் ரூபாக்களை அமெரிக்காவுக்கு சிறிலங்கா கடற்படை கொடுத்துள்ளது. போபோஸ் பீரங்கி களற்றப்பட்டு நிராயுதபாணியாக்கப்பட்டுள்ள சயுர ஆள் கடற் கண்காணிப்புக் கப்பலை இனி சிறிலங்கா கடற்படை என்ன செய்யப் போகின்றது என்ற கேள்வியும் எழுந்திருக்கின்றது.

ஏற்கனவே சிறிலங்கா கடற்படையிடம சாதாரண தரையிறக்கக் கப்பல்கள, இஸ்ரேல் தயாரிப்பு டோறா பீரங்கிக் கலங்கள், சீனத் தயாரிப்புப் பீரங்கிப் படகுகள், கொழும்பு டொக்யாட் கட்டுமான ஆழமற்ற கடல் பயணத்துக்கான வோட்டர் ஜெற் படகுகள், ஏவுகணைக் கப்பல்கள், கட்டளைக் கப்பல்கள் என்பன இருக்கின்றன.

இவற்றில் சகல வகைகளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளால் அழிக்கப்பட்டுள்ளன என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இதில் சிறிலங்கா கடற்படை இழந்திருக்கும் கடற்கலங்களுக்கு மாற்றீடான கலங்களை புதிதாகக் கொள்வனவு செய்யவில்லை. பதிலாக புதிதாக நவீனமான கலங்களை கொள்வனவு செய்யமுனைகிறது. இதுதான் இப்பொழுதுள்ள அமைதிக்காலத்தில் கேள்வியை எழுப்பியுள்ளன.

**சேர் கலகாட் -3005**

பணியில் - 1987 நவம்பர் 25
எடை - 8,751 தொன்
நீளம் - 141
அகலம் - 19.5 மீற்றர்
இயந்திரம் - 4,600 குதிரைவலு
வேகம் - 14நொட்
கூடுதல் வேகம் - 17 நொட்




திரிஸ்ராம் கப்பல்

ஆயுதம் - 20மி.மீ ஒலிகன் பீரங்கி -2
76 மி.மீ இயந்திரத் துப்பாக்கி -2
வானூர்தி தரையிறக்கவலு - வெஸட்லானட் சீகிங் ஹெலிகொப்டர், சி.எச் 47 சிறிய சினூக் ஹெலிகொப்டர்.

வெஸ்ட்லான்ட் சீகிங் ஹெலிகொப்டர் இது அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் உற்பத்தி செய்யப்படுவது பிரிட்டன் கடற்படையில் பயன் படுத்தப்பட்டு வருவது.

அவஸ்திரேலியா, பெல்ஜியம், பாகிஸ்தான், இந்தியா, எகிப்து, ஜேர்மனி, நோர்வே நாடுகளிலும் கடற்படையில் இவை உள்ளன.

ஆட்கள் - 3 பேர்
நீளம் - 16.69 மீற்றர்
உயரம் - 5.20 மீற்றர்
கூடுதல் காவுபாரம்- 9707 கிலோ
வேகம் - மணிக்கு 144 கி.மீ
சி.எச - 47 சிறிய சினூக் ஹெலிகொப்டர்



போக்லாண்ட் போரில் தாக்குதலுக் குள்ளாகி எரியும் கலகாட்

வேகம் - மணிக்கு 173 மைல்கள்
பணி - துருப்புகளை காவுதல், ஆட்டிலறி பீரங்கிகள் உள்ளிட்ட கலங்களை கள முனைகளுக்கு கொண்டு செல்லுதல்.
16 நாடுகள் பயன்படுத்துகின்றன.
ஆயுதம் M60 இயந்திரத் துப்பாக்கிகள் -02

இதற்கு மாறாக தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மைப் பலப்படுத்துகிறார்கள் என்ற பிரசாரம் சிறிலங்கா அரசால் பலமாக மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் சிறிலங்கா படைகள் பலமாக அதிநவீன போர்க் கலங்களை கொள்வனவு செய்து தம்மைப் பலப்படுத்துகின்றது.

செக் தயாரிப்பு ரி-55 வகை டாங்கிகளை 98 என்ற எண்ணிக்கையில் கொள்வனவு செய்ய சிறிலங்கா இராணுவத்துக்கு சிறிலங்கா அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

ரஷ்யத் தயாரிப்பு எம் ஜ-35 வகை பீரங்கி பொருத்திய ஹெலிகொப்டர்

## இணையப் பார்வை

களை சிறிலங்கா விமானப்படை கொள்வனவு செய்துள்ளது.

கடந்த ஈழப்போர் காலங்களில் சிறிலங்கா விமானப்படையால் பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த தாக்குதல் விமானங்களான சீனத் தயரிப்பு எப்-7 உக்ரெய்ன் தயாரிப்பு அன்டனோவ் விமானங்கள், பிரிட்டன் தயாரிப்பு ஹெர்குலிஸ் என்பன திருத்தத்துக்குட்பட்டு கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இப்படியாக சிறிலங்காவின் முப்படைகளும் வலுவாகிவிட்டன. இப்பொழுது அடிக்கடி வெளிநாட்டு போரியல் நிபுணர்களும் சிறிலங்கா வந்து தமிழர் தாயகப் படைத்தளங்களுக்கு பயணம் செய்து போகின்றனர். இதுவும் முக்கியமாக பார்க்கப்படவேண்டியதாகும்.



புதிய சேர் கலகாட்

இதையும் விட சிறிலங்கா - இந்திய பாதுகாப்பு உடன்பாடும் இணக்கம் காணப்பட்டுள்ள நிலையில் இதற்கு இந்தியாவில் தமிழ் கட்சிகளின் கடும் எதிர்ப்பும் கிளம்பியுள்ளது.

பொதுக்கட்டமைப்பு என்பது சமாதான நடவடிக்கைகளுக்கான சமிக்ஞை என்று உலகம் சொல்லிக் கொண்டிருக்கின்ற இந்தக் காலத்தில்தான் சிறிலங்கா அரசு, தனது இராணுவத்திற்காக போர்க் கலங்கள் கொள்வனவுகளையும் வெகு தீவிரமாக நடத்துகின்றது என்பதையும் சர்வதேச சமூகம் உணர வேண்டியது அவசியம். □




## வட்ட நிலா



வட்ட நிலவு வந்தது
வான மீதில் திரிந்தது
இட்டம் போல அலைந்தது
இருளை நீக்க விரைந்தது

தட்டம் போல இருந்தது
தகதக கத்து ஒளிர்ந்தது
நட்சத் திரங்கள் சூழ்ந்திட
நடுவில் நின்று பார்த்தது

மேகம் ஓடி மறைத்தது
மெல்ல இருளும் சூழ்ந்தது
வேகம் கொண்ட வெண்ணிலா
விரைந்து வெளியில வந்தது

தேன்நி லாவின் ஒளியுடன்
தென்றல் காற்றும் சேர்ந்தது
நானிருந்து பாடவே
நல்ல கவிதை ஆனது.

பாரதி சேந்தனார்.

## விடுகதைகள்

1.தலையில் நீர் சுமந்து தாகத்தைப் போக்கிடுவேன் நான் யார்?

2.பள்ளியில் என்றும் குடியிருப் பேன் நாளும் உழைத்து உருக் குலைவேன் நான் யார்?

3.மாதர் கையில் நானிருப்பேன் வண்ணத்தில் பலவிதமாய் வளைந் திருப்பேன் நான் யார்?

4.உலர்த்தி என்னைத் தீயிலிட் டால் நெற்றியிலே குடியிருப்பேன் சாணத்தில் பிறந்தாலும் சாமிக்குச் சாத்திடுவார் நான் யார்?

5.அலுப்போடு ஆயிரம் பேர் வந் தாலும் இடம் தருவேன் தங்குவ தற்கு நிழல் தருவேன் நான் யார்?

6.மூடினால் சிறை மூடாவிட் டால் விடுதலை நான் யார்?

7.இலை போட்டாலும் எல்லோரும் என்னைத் தேடுவார்கள் நான் யார்?

8.நீரின்றி வளர்கின்றேன் வெட்டி னாலும் வளர்கின்றேன் நான் யார்?

9.பார்த்தால் பார்ப்பேன் சிரித்தால் சிரிப்பேன் நான் யார்?

10.பிறக்கும்போது நானில்லை நான் யார்?

P.பவானி.
கொக்குவில்.

## உலகில் புதிய இடங்களைக் கண்டுபிடித்தவர்கள்

| பெயர் | கண்டுபிடிப்பு |
|---|---|
| ♦அமுண்ட்சென் | தென்துருவம் 1911இல் |
| ♦அ. வெஸ்புகி | வடஅமெரிக்கா |
| ♦கொலம்பஸ் | மேற்கு இந்தியத்தீவுகள் 1492 அமெரிக்கா 1494 |
| ♦ஓரிலானா | அமேசன் நதி 1514 |
| ♦லிவிங்ஸ்டன் | பிரித்தானியா |
| ♦நானசென் | கிரீன்லாந்தை தாண்டி வடதுருவத்தை அடைதல் |
| ♦மார்க்கோ போலோ | இந்தியா, சீனா கப்பல் மூலம் 1295இல் சென்றது |
| ♦வால்கோ நூனஸ்டி பால்போலோ | பசுபிக் கடல் |
| ♦ஸ்டான்லி | ஆபிரிக்கா கண்டம் 19ஆம் நூற்றாண்டு |
| ♦மெக்லென் | மேக்லன் ஜலசந்தி |
| ♦வஸ்கொடகாமா | இந்தியா செல்வதற்கு பாதை கண்டுபிடித்தார் |
| ♦கப்டன் கொக் | அவுஸ்திரேலியாக் கண்டம். |

## உங்களுக்குத் தெரியுமா?

♦கிபி 1957ஆம் ஆண்டு முதன் முதலாக ஏவப்பட்ட அமெரிக்கா வின் செயற்கைக்கோள் தரையைவிட்டு மூன்று அடிகள் உயர கிளம்பியதுமே வெடித்துவிட்டது.

♦எப்சிலான் அரிகே என்ற நட்சத்திரம்தான் எல்லாவற்றை யும் விடப் பெரியது. இது சூரியனை விட 27,000,000,000 மடங்கு பெரியதாகும்.

♦உலகிலேயே நீளமான நதி அமேசன். இது 6,437 கிமீ நீள முள்ளதாகும். இதில் 3,158 நீளத்திற்கு கப்பல் விடலாம்.

♦ஒரு தேனீ தேன் சேகரிப்பதற்காக சராசரி 15,000 மலர்க ளுக்குத் தாவவேண்டியுள்ளது. ஒரு தேன் கூட்டில் தினமும் ஒரு கிலோ தேன் சேர்க்கப்படுகிறது.

♦டெட் சீ என்று அழைக்கப்படும் உப்புக் கடலில் யார் வீழ்ந்தா லும் மூழ்க மாட்டார்கள் மிதப்பார்கள்.

♦இந்தியாவில் முதன் முதலாக நிறுவப்பட்ட வங்கி மும்பை யில் உள்ள பிரசிடென்சி பாங்க்தான்.

♦ஆமையால் ஒரு மணிக்கு 216 மீட்டர்கள் வரைதான் செல்ல முடியும்.

எதிர்ப்பைக் கண்டு பயப்படாதீர்கள். முன்னேற்றத் திற்கு எதிர்ப்புகள் இன்றியமையாதவை. வெற்றி என்ற காற்றாடி, எதிர்ப்பு என்ற காற்றை எதிர்த்துக் கொண்டு மேலே பறக்கிறது.

-நார்மன் வின்சென்ட்பீல்

மௌனம் அறிவிற்கு அழகு. பொறுமை திறமைக்கு ஏற்றது.

-கவி காளிதாசன்

## விடைகள்

விடுகதைகள்
1.இளநீர் 2.சோக்
3.கண்ணாடி வளையல்
4.திருநீறு 5.ஆலமரம்
6.கண் 7.தண்ணீர்
8.முடி, நகம் 9.கண்ணாடி
10.பல்

## சிகரத்தின் உயரம்

♦எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 8,848 மீற்றர்.
♦அகான்காகுலா சிகரத்தின் உயரம் 6,960 மீற்றர்.
♦மெக்கென்லீ சிகரத்தின் உயரம் 6,194 மீற்றர்.
♦கிளிமான்ஜரொ சிகரத்தின உயரம் 5,895 மீற்றர்.
♦எல்பரஸ் சிகரத்தின் உயரம் 5,642 மீற்றர்.
♦வின்சன் மாஸ்சிப் சிகரத்தின் உயரம் 5,140 மீற்றர்.

## குரங்கு டான்ஸ்!



அரசன் வித்தியாசவர்மன் பெயருக்கு ஏற்றபடியே வித்தியாசமான பேர்வழி. எதையும் புதுமையாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இருந்தது.

ஒருநாள் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். ஆலம் விழுதுகளைப் பிடித்துத் தொங்கிய படி விளையாடிக்கொண்டிருந்த குரங்குகளைக் கண்டான். இவற்றிற்கு நாட்டியப் பயிற்சி அளித்தால் அரண்மனை நாட்டியக்காரிகளை விட நன்றாக ஆடும் என்று நினைத்தான்.

தன் வீரர்களை விட்டு அந்தக் குரங்குகளைப் பிடித்தான். அவற்றை அரண்மனைக்குக் கொண்டு வந்தான். கலைஞர்களை அழைத்து "அந்தக் குரங்குகளுககு நாட்டியம் கற்றுத் தரவேண்டும்" என்றான்.

கலைஞர்கள் நொந்து போயினர். இருப்பினும் அரச கட்டளையை மீறக் கூடாது என்பதால் குரங்குகளுக்கு நட்டியப் பயிற்சி அளித்தனர். குரங்குகளும் நாட்டியத்தில் தேர்ச்சி பெற்றன. மன்னன் மகிழ்ந்தான்.

தான் நினைத்ததைச் சாதித்துவிட்ட மகிழ்ச்சியில் நாட்டியக்காரர்களைப் போலக் குரங்குகளுக்கு உடை அணிவித்து அரசவைக்கு அழைத்து வரச் சொன்னான்.

எல்லோரும் காண அவை நன்றாக நாட்டியம ஆடின. தன் எண்ணம் நிறைவேறியது என்று மகிழ்ந்தான் அரசன்.

அரசவையில் நாள்தோறும் குரங்குகளின் நாட்டியத்திற்கு ஏற்பாடு செய்தான். அரண்மனை நாட்டியக்காரர்கள் தங்கள் வாய்ப்புப் போனதே என்று வருந்தினர். நாள்தோறும் குரங்குகளின ஆட்டததைப் பார்த்து அவையினர் எரிச்சல அடைந்தனர். வேறு வழியில்லாமல் சகித்துக் கொண்டனர். இந்தக் குரங்கு நடனத்திற்கு ஒரு விடிவு பிறக்காதா என வருந தினர்.

அப்போது அவையில் இருநத புத்திசாலி ஒருவன் இதற்கு தான் ஒரு முடிவு கட்டுவதாக சவால் விட்டான். 'அப்பா உனக்கு கோடி புண்ணியம் கிடைக்கும் அந்த நல்ல காரியத்தை முதலில செய்!' என்றனர் அவையோர்.

மறுநாள், வழக்கம் போல குரங்குகள் நாட்டியமாடத் தொடங்கின.


கைப்பிடி வேர்க்கடலையை அவற்றின் முன் எறிந்தான் புத்திசாலி. அவ்வளவுதான் ஆடுவதை நிறுத்தய குரங்குகள வேர்க்கடலையைப் பொறுக்கத தொடங்கின. அவற்றை வாயில் போட்டுக் கடித்தன. ஒன்றை ஒன்று பார்த்துக் கோபத்துடன் கத்தத் தொடங்கின. அங்கும் இங்கும் பாய்ந்தன.

கோபம் கொண்ட அரசன் அவற்றை அடித்து விரட்டுமாறு வீரர்களுக்கு கட்டளை இட்டான். குரங்குகள் அடித்து விரட்டப்பட்டன.

அவரவர்க்கு உரிய வேலையை அவரவர் தான செய்யவேண்டும் என்ற உண்மையை உணர்ந்தான, அரசன்.

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்!

அன்புக் குழந்தைகளே! உங்களுக்கு விதம் விதமாக வர்ணம் தீட்ட ஆசை தானே! இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்திற்கு வர்ணம் தீட்டி மகிழுங்கள்.



# நகம் கடிப்பவரா நீங்கள்?




நகம் கடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு ஈய நச்சு ஏற்படும் அபாயம் அதிகமாக இருப்பதாக ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளார்கள்.

உடம்பிலுள்ள ஈயங்கள் அனைத்தும நகங்களில படிவதாக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதனால்தான் நகம் கடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுகிறார்கள். இதிலும் அதிகமாக பாதிக்கப்பட்டுகிறவர்கள் குழந்தைகள்.

பால் மற்றும் விற்றமின் பொருட்களைக் குறைவாக சாப்பிட்டு வந்தால் உடலில் ஈயச் சத்து சேர்வது குறைவதோடு, பாதிப்பும் குறையும் என்கிறார்கள் அந்த ஆராய்ச்சியாளர்கள்.

# கிரகங்களைத் தேடி...




அஞ்ஞானிகள் மனித வாழ்க்கையில் நிம்மதியைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். விஞ்ஞானிகள் பூமிக்கு அப்பாலும பல விஷயங்களைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். ஆம்! பூமியைப் போன்றே ஒரு கிரகத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் விண்வெளி விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இம் முயற்சியில் ஓரிரு ஆண்டுகளில் வெறறி கிட்டும் என்றும் அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். விண்வெளியில் சூரிய மண்டலத்துக்கு அப்பால் கிரகங்கள் இருப்பது 1995 ஆம் ஆண்டு முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

இதுவரை 145 கிரகங்கள் கண்டுபிடிக்கபட்டாலும், அவற்றில் உயிரினங்கள் வாழமுடியாது என்பது தெரியவந்துள்ளது. ஆனால் உயிரினங்கள் வாழக்கூடிய பூமி போன்ற கிரகங்கள உள்ளதா என்று கண்டறியும் ஆராய்ச்சியில் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். பூமியைப் போன்ற அளவுள்ள சிறிய கிரகங்களை விரைவில் கண்டறிவோம் என்ற குறிக்கோளுடன் அவ்விஞ்ஞானிகள் மென்மேலும் ஆராய்ச்சயில் ஈடுபட்டுள்ளனர்.

# புன்முறுவல் வெற்றி தரும்

வாழ்வில் நாம் வெற்றி பெற வேண்டுமா? பரச்சினைகளை எதிர்கொண்டு அழைத்து சவால் விட வேண்டுமா? எந்தச் சூழ்நிலையிலும் எம் மனதைப் பதட்டம் கொள்ளாமல் புன்முறுவல் பூத்தபடி எம் வாழ்நாட்களை எதிர்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். கடந்த நாட்களில் தொடர்ந்து ஏதாவது ஒன்றில் முயற்சிசெய்து வந்த போதி



லும் தோல்வியையே தழுவிக் கொண்டிருப்போமானால், அதில நம் நடைமுறைகளையும், நடவடிக்கைகளையும மாற்றிக்கொள்ள முற்பட வேண்டுமே தவர வதியையோ, மற்றவர்களையோ குற்றஞ்சாட்டிக்கொணடிருக்கலாகாது. அத்தகைய சூழ்நிலையில் எம் மனம் நிலைகுழையாமல் இருக்க அவசியமான மருந்து புன்முறுவல் எனும் புன்சிரிப்புத்தான்.

இன்றைய காலகட்டத்தில் நம்மைப் பதட்டப்பட வைக்கக்கூடிய பல விஷயங்கள் உள்ளன. படிப்பு சம்பந்தப்பட்டவைகள் தவிர, தனிப்பட்ட விஷயங்கள் எல்லாம் கூட மனக் குழப்பம் தரவல்ல சமாச்சாரங்களாக பல உள்ளன. அவற்றினால் பாதிபபு ஏற்பட நாமே வழி வகுத்துக் கொண்டால் அது பெரிய பிரச்சினைகளில் நம்மைக் கொண்டு சென்று தள்ளிவிடும்.


உடல்ரீதியாக மட்டுமல்ல மன ரீதியாகவும்தான். அதற்கு உதாரணங்களாக நாம் பலவிதமானவர்களை எம் கடந்த நாட்களில் கண்டிருப்போம். ஆதலால அதனில் இருந்து எம்மைத் தவிர்க்க முதற்படி மனதை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வது தான். நிச்சயமாக அதன். வெளிப்பாடு எம் முகங்களில் தெரிந்துவிடும். அதனால் தான் என்னவோ அகத்தின அழகு முகத்தில் தெரியும் என்று முன்னோர்கள் சொன்னார்கள போலிருக்கிறது.

மனித மனம் என்பது ஆத்மீகத்தின் அடிக்கல். ஆதலால் எமக்குள் ஏற்படும் மனக்குழப்பங்கள், நெரிசல்கள், துக்கச் செயல்கள் அனைத்தையும் எதிர்கொண்டு எம் உடல் நலத்தையும ஆரோக்கியததையும் முதலில் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இனறு அதிகாரிகள் மற்றும தொழில்நுட்ப அறிவு நிரம்பியவர்கள் கூட கடமையின் சுமை காரணமாக மனம் நொந்து போவதுண்டு. அதைத் தவிர்க்க மனதை மட்டுமன்றி முக பாவத்தையும் திடமாக வைத்துக்கொள்ளப் பழகவேண்டும். எந்தச் சூழ்நிலையிலும், எந்தக காரணத்திற்காகவும் பொறுமையிழந்து புன்னகையை வட்டுவிடலாகாது. யாரும் நேரிடையாக வந்து முகத்தில் அடித்தாற்போல் ஏசினால் கூட நிதானததை இழந்துவிடலாகாது. நிதானம் இழந்தால் முகபாவம் மாறும். முகபாவம் மாறினால் முகம் புன்னகையை விட்டுவிடடு விகாரமானதோர் வடிவிற்கு வரவழைத்துக் கொள்ளும். எனவே இவறறையெல்லாம் தவிர்த்துவிடுவதற்கான ஒரே நல்ல வழி எது நடந்தாலும் எது வந்தாலும், எது போனாலும் புன்னகை மாறாமல் முகததையும் அதன் மூலமாக மனதையும் நல்ல முறையில் வைத்திருப்பதுதான. நாம் நினைத்தது நிறைவேறாமல் போனால் கூட புன்னகை மாறாத பொலிவோடு காரண காரியங்களை ஆராய வேண்டுமே தவிர துவண்டு போய்விடக்கூடாது. யாவும் ஒரு விபத்து என நினைத்து அத்தகைய ஒரு வழக்கததை பழககப்படுத்திக்கொள்வோமானால் வெற்றி நிச்சயம்.

ஆக, வாழக்கையில வெற்றியடைய மாறாத புன்னகையுடன் காரியமாற்றுவதே நல்லவழி. எனவே, இவ்வாறு நடந்தால் எல்லோரும் விரும்பும் ஆளாக மாற தயாராகிவிட்டீர்களா? இனிமேல் யாரும் உங்களை வெறுக்க முடியாது.

- நல்ல எண்ணங்கள், செல்வம், வெற்றி போன்றவற்றைப் பற்றியே எப்போதும் எண்ணுங கள். இவற்றையே உங்கள் சிந்தனையில் தொடர்ந து சேமியுங்கள். பிற்பாடு இவை வட்டியுடன் சேர்ந்து பெருமுதலாக பெரிய வெற்றிகளாக உங்களுக்குக் கிடைக்கும். உங்கள் ஆழ்மனம இவற்றை உறுதியாகப் பெற்றுத் தரும்.
- ஒரு மனிதனின் பலவீனமே பெரும்பாலும் அவனுடைய வலிமைகளில் சிறந்ததாக அமைந்து விடுகிறது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல - 66



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 66**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ........................................
முகவரி :- ........................................
........................................
........................................

இங்கே வெட்டுக ---------------------------------

*மேலுள்ள கூப்பனில் வீடைகளை நிரப்பி எதிர்வரும் 07ஆம் த்கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

## இடமிருந்து வலம்

(1)பாட்டுக்கு ஒரு புலவன். (22)சில தாவரங்கள் வேரில் உணவை சேமித்து வைத்திருக்கும். அதனை இப்படி அழைப்பா. (26)உடல் பலம் மட்டும் போதாது. இதுவும் அவசியம். (31)இனப்பிரச்சினை தீர்வு பற்றி முன்னொருபோது இங்கும் பேசப்பட்டது. (திரும்பியுள்ளது).

## மேலிருந்து கீழ்

(1)பரமசிவனின் சரிபாதியாய் அமைந்தவள். (3)மன அமைதிக்கு வழி. (5)கலகம் விளைக்கும் திரிலோக சஞ்சாரி (கீ.மே). (6)'இது உயர' என்றா ஔவையா. (19)கனிகளை மட்டுமல்ல ஞானத்தையும் இதனுடன் சேர்த்துக் கூறுவர் (மாறி வருகிறது). (20)வெல்லம், பழம் என்பவற்றை காய்ச்சினால் வரும் சாற்றை இப்படி அழைப்பர். (21)ஏர் பிடிக்கும் உயர்ந்த தொழில். (27)இறந்தோர் நினைவாக இந்துக்கள் நடத்தும் மதச் சடங்கு.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.64 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1.அநுராதபுரம் 6.கரை 7.கலவை 8.பரம் 10.கைலாசம் 12கண் 13.கிளி 14.கட்டி 15.கரி 16.பண்டிகை 17.தூண்டில்

### மேலிருந்து கீழ்

1.அகலிகை 2.நுரை 3.தகரம் 4.புலம் 5.ரவை 8.பசளி 9.தண்டிகை 11.லாகிரி 12.கட்டில் 14.கண்டி 15.கவி

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

**முதற் பரிசு** :- ச.திவ்வியன், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

**இரண்டாம் பரிசு** :- வ.நிஜந்தினி, காரைநகர் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு** :- வி.செல்வநாயகம், "சாருஜா", சிவன்கோவில் வீதி, புத்தூரி.

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அத்ஷ்டசாலிகள்ன் பெயர் வ்பரம்**

யோ.ஜெகதீஸ்வரி, சாவகச்சேரி. கு.யெறால்டபோட், குருநகர். செல்வி. நா.கந்தசாமி, யாழ்ப்பாணம். க.ஞானோதயன், தெல்லிப்பளை. இ.இளமதி, மானிப்பாய். ஏ.கபீர்த்தன், அரியாலை. சி.தர்சினி, தம்பசிட்டி. பா.செல்வராணி, வட்டுக்கோட்டை. வெ.வாராஹி, சுழிபுரம். வே.குமாரசுவாமி, கரவெட்டி. இ.வசந்தினி, ஏழாலை. ஆ.டெனிஸ்ரா, மானிப்பாய். க.குருநாதன், கோண்டாவில். ம.ஜனா, இணுவில். T.S.சங்கீதா, T.S.சம்பூரணி, வட்டுக்கோட்டை.

# உணவு உற்பத்தியாளருக்கான விசேட கலந்துரையாடல் இன்று

(சுதுமலை)

நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர் பகுதிக்ளில் இயங்கும் உணவு நிலையங்கள், உணவு உற்பத்தி செய்யும் நிலையங்கள், குளிர்பானம், மென்பானம், தயாரிப்புாளர்களிற்கான விசேட கலந்ரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை பி.ப 3மணிக்கு கோப்பாய் கிரிஸ்தவக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதிஸ்வரன் மற்றும் யாழ்.மாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் மற்றும் அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் கலந்துகொண்டு வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ள உள்ள சுகாதார நடைமுறைகள், பினபற்றவேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பாக அறிவுறுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-252)

# 83 ஆவது சர்வதேச கூட்டுறவு தினம்

கட்டைவேலி-நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடாத்தும் 83 ஆவது சர்வதேச கூட்டுறவுத்தினம் இன்று சனிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் சங்கக்காரியால மண்டபத்தில் சங்கத் தலைவர் ஆசிரியர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதியும், சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் பொ.புஸ்பகுமார், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் ந.இன்பன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி ம.ம.வித்தியாலய அதிபர் செ.சேதுராசா, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் வே. சிவசிதம்பரம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அதிபர் வி.சுகுமாரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், முதல் நாள் நிகழ்வாக க.பொ.த. (சா/த)ப் பரீட்சையில் சிறப்புச் சித்தி அடைந்தவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

(ற-2)

# இலங்கையின் அதிசிறந்த கழகமாக மானிப்பாய் பரிஷ் லியோ கழகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பரிஷ் லியோ கழகம் இலங்கையில் அதிசிறந்த கழகமாக (**Most outstanding club of the srilanka**) தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பு மகாவலி மாநாட்டு மண்டபத்தல் நடந்த இலங்கை லியோ கழகங்களுக்கிடையேயான மாநாட்டில மானிப்பாய் பரிஷ் லியோ கழகம் சிறந்த கழகமாக தெரிவுசெய்யப்பட்டது.

அத்துடன் 11 விருதுகளையும் அக்கழகம்பெற்றுக்கொண்டது. அவற்றில் அதிசிறந்த லியோ தலைவராக ரிவிஜயகுமாரும் (**1st runner up-most outstanding president of srilanka**) தெரிவுசெய்யப்பட்டார். இதே போன்று செயலாளர், இதழாசிரியர், பொருளாளர் மற்றும் சூழல், லியோ லயன் தொடர்பு, சுகாதார திட்டங்களுக்கும் அகில இலங்கை ரீதியாக விருது கிடைத்துள்ளன.

மேலும் மாவட்டம் 306- **B** 20 விருதுகளையும் பெற்றதுடன் அதிசிறந்த கழகமாக தெரிவானதுடன் அதிசிறந்த லியோத் தலைவரும் கௌரவிக்கப்பட்டார்.

(ற-19)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சூழல்பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல எதிர்வரும் 07 ஆம் திகதி காலை 10மணிக்கு சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் பிராந்திய சுற்றுச்சூழல் பாதுகாப்பு அலுவலர் மற்றும் பிரமுகர்கள் கலந்துகொண்டு அலோசனைகளை வழங்கவுள்ளதுடன் நகரசபை எல்லைக்குள் தொழில் நிலையங்களை நடாத்துவோர் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(அ-21)

# சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கொழும்பில் விசேட கூட்டம்

## கைதிகளின் பாதுகாப்புக் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலை அதிகாரிகளுக்கான விசேட கூட்டமொன்று கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பாதுகாப்பு தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லப்படும் போதும் மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துவரப்படும் போதும் விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்பது குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை அழைத்துச்செல்லும் போது அது குறித்து அந்தந்தப்பிரதேசங்களில் இருக்கின்ற பிரதேச பொலிஸ் மா அதிபர்களுடன் கலந்தாலோசனை நடாத்தி பொலிஸாரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலையில் உள்ள இடநெருக்கடி குறித்தும் இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

(ர-8)

# தொழிற்சங்கங்களின் இணக்கப்பாட்டுடன் இம்மாதத்துள் மின்சாரசபை மறுசீரமைப்பு

சிறிலங்கா மின்சாரசபை மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இம் மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்படும் என பிரதியமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில மின்சாரசபை சட்டமூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் அது சம்பந்தமாக எழுந்துள்ள சிறுசிறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தற்போது பேச்சுவார்ததைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

மின்சாரசபை மறுசீரமைப்பு சம்பந்தமாக நியமிக்கப்பட்ட குழுவினர் கடந்த 27ஆம் திகதி பிரதமரைச் சந்தித்தாக பிரதியமைச்சர் தெரிவித்தார்.

அனைத்து தொழிற்சங்கங்களினதும் இணக்கபாட்டுடனேயே மின்சாரசபை மறுசீரமைக்கப்படும் எனவும மறுசீரமைப்பு நடவடிக்கைகள தாமதமடைவதால் நாளொன்றிற்கு சுமார் 5 கோடி ரூபா நட்டம் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழிற்சங்கங்களுக்குத் தெரியாமல் மின்சாரசபை மறுசீரமைக்கப்பட மாட்டதென 27 ஆம் திகதியன்று நடந்த சந்திப்பின் போது தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் பிரதமர் உறுதியளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

(அ)

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு குறித்து ஆராய விசேட உபகுழு நியமனம்

(கொழும்பு)

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவைச் குறைப்பது தொடர்பாக அரசு தீவிர கவனம செலுத்தி வருகின்றது.


இதற்கான யோசனைகளை முன்வைப்பதற்கென விசேட அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு தொடர்பாக ஆராயும். அமைச்சரவை கூட்டமொன்றிலேயே இந்தத் தீமானம் எடுக்கப்பட்டதாக போக்குவரத்து அமைச்சர் பீரிஸ் பெரேரா தெரிவித்தார்.

இந்தக் குழு தனது யோசனைகளை இரண்டு வார காலத்துக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலானா இக்குழுவில் அமைச்சர் சரத் அமுனுகம, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, தினேஷ்குணவர்தன ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

(ற-8)

# சிறைத் தண்டனையை இரத்து செய்யக்கோரி சதுர்வேதி சாமியார் அப்பீல் மனுத்தாக்கல்



(புதுடில்லி)

குண்டர் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டதை இரத்துச் செய்யக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் சதுர்வேதி சாமியார் அப்பீல் மனுத்தாக்கல் செய்துள்ளர்.

இந்த மனுவுக்கு ஆறு வாரங்களுக்குள் பதில்அளிக்குமாறு தமிழக அரசு மற்றும் சென்னை மாநகர பொலிஸ் கமிஷனருக்கு நோட்டீஸ் அனுபப சுப்ரீம் கோர்ட் உத்தர விட்டுள்ளது.

திருச்சி, உறையூரைச் சேர்ந்தவர் சதுர்வேதி சாமியார். இவர் சென்னை தி.நகரில் பசுல்லா சாலையில் ஆசிரமம் நடத்தி வந்தார். சென்னையில் உள்ள தொழிலதிபரின் மனைவி மற்றும் மகளைக் கடத்தி செக்ஸ் சித்திரவதை செய்த வழக்கில சென்னை மத்திய குற்றப் பிரிவு பொலிஸார் சதுர்வேதி சாமியாரை கைது செய்தனர். அவர் மீது பல மோசடி வழக்குக்ள் பதிவு செய்யப்பட்டன. இதையடுத்து குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ சதுர்வேதி சிறையில் அடைக்கப்பட்டார்.

குண்டர் சட்டத்தின்கீழ் தன்னைக் காவலில் வைத்ததை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் சதுர்வேதி மனுத்தாக்கல் செய்துள்ளார். மனுவை நீதிபதிகள் கற்பகவிநாயகம், நாகப்பன் ஆகியோர் அடங்கிய டிவிசன் பெஞ்ச் விசாரித்தது. குண்டர் சட்டத்தின் கீழ சதுர்வேதியை காவலில் வைத்தது செல்லும் என்று டிவிசன் பெஞ்ச் தீர்ப்பளிததது.

சென்னை ஐகோர்ட் அளித்த தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோட்டில் சிறப்பு அனுமதி மனுவை சதுர்வேதி தாக்கல் செய்தார். அப்பீல் மனுவில் 'எனது நடவடிக்கையால் பொது அமைதி பாதிக்கப் பட்டது என்று யாரும் வாக்குமூலம் அளிக்கவில்லை. இதற்கான ஆதாரங்கள் இல்லை. பொது அமைதி பாதிக்கப்பட்டதற்கான சம்பவம் பற்றி காவல் உத்தரவில் குறிப்பிடப்படவில்லை. குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதால் தினசரி பூஜைகள் செய்ய முடியவில்லை. இது பக்தர்களுக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கிறது. ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் பெற்று வந்த உதவிகள் தடைப்பட்டுள்ளன. கடந்த ஏப்ரல 25ஆம் திகதி ஐகோர்ட் பிறப்பித்த உத்தரவை இரத்துச் செய்ய வேண்டும். அப்பீல் மனு மீதான தீர்ப்பு வரும்வரை ஜாமீனில் விடுவிக்க வேண்டும் என்று சதுர்வேதி கூறியுள்ளார்.

இந்தச் சிறப்பு அனுமதி மனுவை நீதி பதிகள் வெங்கடராம ரெட்டி, அரிஜத் பசாயத் ஆகியோர் அடங்கிய டிவிசன் பெஞ்ச் விசாரித்தது. சதுர்வேதி சார்பில் சீனியர் வக்கீல் துளசி, வக்கீல் ரவிசங்கர் ஆகியோர் ஆஜராயினர். மனுவுக்கு ஆறு வாரங்களுக்குள் பதிலளிக்கு மாறு தமிழக அரசு மற்றும் சென்னை பொலிஸ் கமிஷனருக்கு நோட்டீஸ் அனுப்ப டிவிசன் பெஞ்ச உத்தர விட்டுள்ளது.

காஞ்சிபுரம் கோயில் மேலாளர் சங்கரராமன கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட ரகு, சுந்தரேச அய்யர் உட்பட பலர் குண்டர் தடுப்புச சட்டத்தன் கீழ காவலில் வைக்கப்பட்டனர். இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் தமிழக அரசு சார்பில் ஆஜரானவர் டில்லி சீனியர் வக்கீல் துளசி தற்பேது தமிழக அரசுக்கு எதிராக சதுர்வேதி சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் சீனியர் வக்கீல் துள்சி ஆஜராகி வாதாடினார்.

(ற)



திருவாசகத்துக்கு இசைஞானி இளையராஜா அமைத்த சிம்பொனி இசை குறுந்தகடை மத்திய அமைசசர் ஜெய்பால் ரெட்டி வெளியிட பால முரளிகிருஷ்ணா பெற்றார். குறுந்தகட்டுடன் வை.கோ, ரஜினி காந்த்,கமல ஹாசன்,பாரதி ராஜா, இந்து என்.ராம்.பீட்டர், அல்போன்ஸ் உள்ளனர்.

# கருணாநிதிக்கு எதிரான பேச்சு; ராமதாஸ் - திருமாவளவன் மோதல்

(சென்னை)

தி.மு.க கூட்டணியில் காங்கிரஸ், பா.ம.க, ம.தி.மு.க, இ.கம்யூனிஸ்ட், வ.கம்யூனிஸ், முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகள் உள்ளன.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் இக்கூட்டணி 40 தொகுதிகளிலும் வென்றது. சட்டமன்ற தோதலிலும் இக்கூட்டணி தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தி.மு.க.கூட்டணியில் மத்திய மந்தரி இளங்கோவன் பேச்சால் சமீபத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

பா.ம.க.தலைவர் டாக்டர் ராமதாஸின் ஆங்கில எதிர்ப்பு நடவடிக்கைகளை இளங்கோவன் குறை கூறினார். விளம்பரப் பலகைகளில் தமிழ் எழுத்தை அழிபபதும், சினிமாப் படங்களுக்கு தமிழ்ல பெயர் சூட்ட வற்புறுத்துவதும காட்டுமிராண்டித்தனமான காலததுக்கு அழைததுச் செல்லும் செயல் என்றும் அவர் விமர்சித்தார்.

இளங்கோவன் பேச்சு பா.ம.க.தலைவர்களை ஆத்திரப்படுத்தியது. தமிழ் பகைவர்களுக்கு ஆதரவாக அவர் செயல்படுவதாக ராமதாஸ் குற்றம் சாட்டினார்.

இதற்கிடையில் தி.மு.க தலைவா கருணாநிதியை இந்தப் பிரச்சினையில் விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் இழுத்து வட்டார். தமிழுக்கு எதிரான விவாதத்தை செய்ய இளங்கோவனை கருணாநிதி தூண்டிவிட்டார் என்று திருமாவளவன் கூறினார். கருணாநிதி இதை மறுத்தார்.

மொழிப் பிரச்சினை குறித்து இளங்கோவன் தெரிவித்த கருத்துக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்போ, சம்பந்தமோ கிடையாது என்றும தவறான பொருள் கொள்ளக்கூடிய வகையில் அவர் அதை பேசி இருக்க தேவையில்லை என்றும் கருணாநிதி கூறினார்.

கருணாநிதியை திருமாவளவன் விமர்சித்ததில் ராமதாஸுக்கு உடன்பாடு இல்லை என்று கூறப்படுகிறது. இருவரும் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கததை சேர்நது நடத்துகின்றனர். அதே நேரம தமிழக ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் தலைவரான கருணாநிதியை இப்பிரச்சினையில் இணைத்து திருமாவளவன் குறை கூறியதை ராமதாஸ் விரும்பவில்லை.

இதனால் இருவருக்கும் இடையே விரிசல் ஏற்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது.

இலங்கையுடன் இந்திய அரசு இராணுவ ஒப்பந்தம் செய்யக்கூடாது என்று வலியுறுத்தி திருமாவளவன் கடந்த 28ஆம் திகதி சென்னையல் உண்ணாவிரதம் இருந்தார். இந்த உண்ணாவிரதத்தை ராமதாஸ் முடித்து வைப்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் ராமதாஸ் வரவில்லை.

அவர் வந்திருந்தால் திருமாவளவனின் கருணாநிதிக்கு எதிரான பேச்சை ஆமோதிப்பது போல் ஆகியிருக்கும். எனவே, புறக்கணித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இருவர் மோதலும் விரைவில் வெடிக்கும் என்று பரபரப்பாக எதிர்பார்க்கப்படுகிறது. (ற)

## இந்திய உலகம்



நாகை மாவட்டத்தில் சுனாமி பாதிப்பு பகுதிகளை ஜனாதிபதி அப்துல்கலாம் நேற்றுமுன்தினம் பார்வையிட்டு சுனாமி பாதித்த மீனவ பெண்களை சந்தித்து குறை கேட்கிறார்.

# கவிஞர் சூரியநிலாவின் சூரியக்குளியல் ஓர் எடுத்துரைப்பியல்

1990 முதல் 2000 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஈழத்துப் புதுக்கவிதை வீறுணர்ச்சிக் கவிதைகளாகவும் 2000 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட கவிதைகள் எதிர்பார்ப்பு, ஏக்கம், சஞ்சலம், நம்பிக்கை – வரட்சி நிலைகளையுடைய கவிதைகளாகவும் பரிணமிக்கின்றன.

இந்நிலையில் கவிஞர் சூரியநிலாவின் 'சூரியக்குளியல்' கவிதைத் தொகுப்பினூடே பல்வேறு பரிமாணங்களைக் காணமுடிகின்றது.

ஐயோ! யாழ்ப்பாணம்
எங்கு போச்சு"
"மூலை முடுக்கெங்கும்
ஓலைக்குடிசைகளாய்
வாலைக்கிளப்பி நிற்கும் – வடி
சாலைத் தவறணைகள்"

இக் கவிதைகளை எடுத்துக் காட்டாகக் கூறிச் செல்லும் அதே வேளை சமூகத்தில் நிகழும் யுத்த சூழல், தேசிய எழுச்சி, தேசிய உணர்வு என்பனவும் இவரைத்தாக்காமல் இருக்கவில்லை. "புத்தனே புகலிடம் தேடு", "நேரம் எட்டு மணி", "முகாரி ராகங்கள்", "சுதந்திர மூச்சு", "நெருப்புத் துண்டங்கள்" போன்ற கவிதைகள் கவிஞரின் தேசிய உணர்வினை எடுத்தியம்புகின்றன.




நூல் :- சூரியக்குளியல்
ஆசிரியர் – கவிஞர் சூரியநிலா
விலை:- ரூபா 150/=

## திறனாய்வுக்களம்

"நாள்க் கஞ்சி குடித்து
நாம் வாழ்ந்த போது
ஊழ்க்கஞ்சி கொண்டா
உயர்ந்தெழுந்து வந்தாய்"

என்ற வரிகளில் சுனாமிப் பேரனர்த்தம் கண்டு கலங்கியதை சமூகவியல் பொருளாதாரக் கட்டுமானத்தினூடாக கூறிச்சென்றுள்ளதை அவதானிக்க முடிகிறது.

கவிஞர் சூரியநிலாவினுடைய மனதில் ஆழப்பதிந்த விடயங்களில் ஒன்று தொழிலாளர் பற்றிய ஏக்க நிலையாகும். இக் கவிதைத் தொகுப்பில் சில கவிதைகள் தொழிலாளர் மீதான, தொழில் மீதான அக்கறை உணர்வை எடுத்துக் காட்டுகின்றன.

"குடிமக்கள் வாழும்
உயிர்ப்பு சக்தி
உழைப்பவன் சிந்தும்
வியர்வைத் துளியே..."

என்ற கவிதையில் தொழிலினதும் தொழிலாளர்களதும் பெருமை பேசப்பட்டிருக்கின்றது.

மேலும் சமூகம் பற்றிய கவிஞர் சூரியநிலாவின் பார்வையில்,

"குடிவெறி குதர்க்கம்
கும்மாளம்

"முகாரி ராகங்கள்" எனும் கவிதையில்

"முட்கம்பி வேலிகளுள்
முடங்கிப் போய்க் கிடக்கும்
தமிழ்க் கிராமங்கள் பாடும்
முகாரி ராகங்கள்......."

என்ற கவிதை உயர் பாதுகாப்பு வலயத்தால் விழுங்கப்பட்டுள்ள தமிழ்க்கிராமங்கள் பற்றிய தேசிய உணர்வினைப் பேசுகின்றது.

"எலும்புக் கூடுகளை
எடுத்து ஆராய்ச்சி செய்து
கணவனைக் கண்டுபிடிக்க
கண்ணீர் வடிக்கும் காலம்.."

என்ற கவிதையினூடாகத் தேசியம் பற்றிய தாக்கம் நன்கு புலனாகின்றது.

இவ்வாறாக நட்பு, பெண்ணியம், நம்பிக்கை, தத்துவம், ஆன்மீகம் போன்ற விடயங்களிலும் தனது கிளைகளைப் பரப்பியிருக்கிறார் கவிஞர் சூரியநிலா.

"அச்சுறுத்தல் பல வந்து
அநியாயம் செய்தாலும்
துச்சமென அதை நினைத்து
துல்லியமாய் பணிசெய்வார்"

எனும் யதார்த்தமான கவிதை வரிகள் பத்திரிகையாளர்களை உயர்வு படுத்திவிடுகிறது.

பொதுவாகக் கவிஞர் சூரியநிலாவின் கவிதைகளைத் தொகுத்து நோக்குகின்ற போது அவரது கவிதைகள் மென்போக்கு எடுத்துரைப்பியலாகவும் அவரது இயங்கு தளம் சமூக மீட்சி, அவாவுடையதாகவும் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

இந்த நிலையில் ஈழத்துப் புதுக் கவிதைகளோடு கவிஞர் சூரியநிலாவின் கவிதைகளை வைத்து நோக்குகையில் சூரியநிலாவுடைய கவிதைகள் இன்னும் கூர்மைபெறவேண்டும்.

அத்துடன், அவரது அவதானிப்புக்கள் அகலமானதாகவும் ஆழமானதாகவும் அமையவேண்டும். □

நக்கீரன்

---

மருதமடுத் திருப்பதியின் ஆடிமாதத் திருவிழா இன்றாகும்

## மாமதுர மடுப்பதியில் மாமரித்தாய் மாண்பொளிரப் பவனி

ஓவியச் சிற்பம்! ஓங்கார அற்புதம்! தெய்வீக
அருள் மழையின் எழில் முகில்!
கூடவிஅழைக்கும் பாவிகள் தஞ்சம்!
ஆன்மீக ஞானச் சஞ்சீவி! மடுச் செபமாலை
நாயகி இன்று எழுந்தாள்!
தா (தூ) யவளின் துயை மலரும்! செந்
தாமரையின் இதழ் விரியும்!
பூவதனக் கயல் விழிகள் புதுமை
விளக்காய் ஒளிரும்
காவிய ஞாலக் "கனகாபுரி" யெனவே
கோகனக மலர் சொரிந்து; ககனமெங்கும்
மோகனப் புன்னகை புரியும்!
காவிரிப் பெருக் கெனக் கரைபுரள
தாவியணி திரண்டு மறை நான்கு பக்துகோடி
ஓதும் நல்நன்றிகள்! விண்ணப்பங்கள்
பாமாலைகள்; பண்ணிசைகள் விண்ணதிரும்!
தேமதுரத் தமிழும்! சிங்களமும் சங்கமித்து
தேவ அன்னை! தெய்வ மங்கையின் சங்கை
போற்றும்!
மாமதுர மடுப்பதியில் மாமரித்தாய்
மாபரன் யேசுவை மழலையாய் ஏந்தி
மாணிக்கத் தேரமர்ந்து!
ஆவல் மேவும் அடியவர்கள் மிடிமைபோக்க
மாவனப்புக் கானகத் தா (ய்)ல்
மாண் பொளிரப் பவனி வந்தாள்!

பொருள்
ககனம்:-காடு, வனம்
கோகனகம்:- ஒருவகைப்பூ

தே. ச. வில்சன், யாழ்.

---

# வடக்கு – கிழக்கு மாகாண உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாவட்டங்களுக்கிடையிலான மாகாணமட்ட உதைபந்தாட்டப் போட்டி இன்றும், நாளையும், நாளை மறுதினமும் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன.

முதலில் கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து திருகோணமலை மாவட்ட அணியும், முல்லைத்தீவு மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணியும், யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து அம்பாறை மாவட்ட அணியும், வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட அணியும் மோதவுள்ளன. இப்போட்டிகளில் வெற்றிபெறும் அணிகள் பெறும் புள்ளிக்ளின் அடிப்படையில் அரையிறுதி, இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன. (அ-19)



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவின் போது புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் சகிதம் முதன்மை விருந்தினர் இ.ஸ்ரீகாந்தன், கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர், அதிபர் செ. சிவநடராசா, உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ. குபேரநாதன் ஆகியோர் அழைத்து வரப்படும் காட்சியைப் படத்தில் காணலாம்.

---

# பொதுக்கட்டமைப்பில் ஏற்படும் பின்னடைவு இலங்கைப் பொருளாதாரத்துக்கான சவால்

(கொழும்பு)

ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக்கட்டமைப்பின் நடைமுறைச் சாத்தியம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி கடந்த 10 வருட காலத்தில் இப்பொழுதுதான் மிகவும் தீர்க்கமான முடிவு ஒன்றின் அடிப்படையில் இந்தப் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளார்.

மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் இதில் கைச்சாத்திட வைக்கும் நோர்வேயின் அணுகுமுறையும் வெற்றி கண்டுள்ளது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை, அதற்கு முன்னரான இந்திலங்கா ஒப்பந்தம் போன்றவற்றைப் போல இந்தப் பொதுக்கட்டமைப்பிலும் அரசாங்கத்தின் நம்பகத்தன்மை வெளிப்படுத்தப்படுமா? என்ற சந்தேகம் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் இருப்பதாக வன்னித்தரப்புகள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் நம்பகத்தன்மையை தென்னிலங்கைக்கு நிருபிக்க வேண்டிய பொறுப்பொன்றை ஜனாதிபதி எதிர்பார்த்திருக்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் தென்னிலங்கையில் பொதுக்கட்டமைப்பிற்கு எதிரானவர்கள் மத்தியில் அதன் செயற்பாடுகளை கொண்டு செல்லவேண்டிய பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளையும், அரசாங்கத்தையும் சார்ந்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னர் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் நடைமுறைப் படுத்தலில் அரசாங்கத்தின் தரப்பு உரிய முறையில் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு ஏற்கனவே தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பொதுக் கட்டமைப்பைப் பொறுத்தவரையில் அரசாங்கம் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

முன்னர் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது இலங்கை அரசாங்கத்திற்கு மாற்றுப் பொருளாதார வழிவகைகள் இருந்தன. அதனால் அரசாங்கத்தின் பின்னடைவுகள் தென்னிலங்கையை பெரிதாகப் பாதிக்கவில்லை.

ஆனால் இன்றைய நிலையில் அரசாங்கம் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் பின்னடைவை எதிர் கொள்வதாக இருந்தால் அது தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களின் புனரமைப்பை மாத்திரமல்ல இலங்கையின் பொருளாதாரத்தையும் சீரழியச் செய்துவிடும். இதனைக் கருத்தில் கொண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமாக இருந்தாலென்ன ஜே.வி.பியின் சார்பிலான அரசாங்கமாக இருந்தாலென்ன அவை பொதுக் கட்டமைப்பின் நகர்வுகளை உரிய முறையில் நடத்திச் செல்ல வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (து-9)



கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற செல்வி பா. மார்க்கண்டு அவர்களின் சேவைநலன் பாராட்டு விழாவில் நல்லூர் ஆனந்த வித்தியாலய அதிபர் ஆ. சிவராசா பாராட்டுரை வழங்குவதையும், யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந. வரதராசா, முன்னாள் நல்லூர்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ச. காங்கேயன், செல்வி. பா.மார்க்கண்டு, ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் பாடசாலை அதிபர் சோ. சோமேஸ்வரப்பிள்ளை ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- அல்லைப்பிட்டி நிருபர்)

---

# நூலகமும் தகவல் விஞ்ஞானமும் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகச் சங்கத்தினால் நடத்தப்படும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. யாழ்ப்பாண நிலையத்தில் இக்கற்கைநெறியினைப் பயில விரும்புவோர் இன்றும் நாளையும் மற்றும் 9,10 ஆம் திகதிகளிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் முற்பகல் 9.30 தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சைக்கு நேரடியாகச் சமுகமளிக்குமாறு யாழ்.நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி க. சந்திரசேகர் கேட்டுள்ளார். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோர்,

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாகவோ அல்லது
- க.பொ.த(உ/த) பரீட்சையில் ஒரு தடவையில் 03 சித்திகளுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி பெற்றவராகவோ அல்லது,
- க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியுடன் கூடிய 06 சித்திகளுடன் நூலகத்துறையில் குறைந்தது 03 வருடங்களாவது தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (ஆங்கிலத்தில் சித்தியில்லாதவர்களுக்கு ஆங்கிலத்தில் தகுதிகாண் பரீட்சை நடத்தப்படும்)

அத்துடன், நேர்முகப்பரீட்சைக்கு வருகைதருவோர் தமது அடையாள அட்டை மற்றும் பிறப்பு, கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளுடன் அவற்றின் நகற்பிரதிகளையும் கொண்டுவருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விண்ணப்பிக்கத் தேர்ந் தெடுக்கப்படுவோர் விண்ணப்பப் படிவக் கட்டணமாக ரூபா100/- செலுத்த வேண்டும். கற்கைநெறிக் கட்டணமாக ரூபா 6,300 /- முழுமையாகச் செலுத்தப்படவேண்டும். விரிவுரைகள் வார இறுதிநாட்களில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால்

## யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி

## வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2005 யூலை, ஓகஸ்ட் செப்ரெம்பர், மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப் பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படும் இடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2005 யூலை (MT) | 2005 ஓகஸ்ட் (MT) | 2005 செப்ரெம்பர் (MT) |
| 01 | சாவகச்சேரி | 90 | 90 | 90 |
| 02 | கைதடி | 35 | 35 | 35 |
| 03 | கொடிகாமம் | 100 | 100 | 100 |
| 04 | உடுப்பிட்டி | 15 | 15 | 15 |
| 05 | கட்டைவேலி-நெல்லியடி | 15 | 15 | 15 |
| 06 | பருத்தித்துறை | 40 | 40 | 40 |
| 07 | புலோலி | 15 | 15 | 15 |
| 08 | மருதங்கேணி | 15 | 15 | 15 |
| 09 | யாழ்ப்பாணம் | 90 | 90 | 90 |
| 10 | நல்லூர் | 30 | 30 | 30 |
| 11 | அச்சுவேலி | 35 | 35 | 35 |
| 12 | நீர்வேலி | 35 | 35 | 35 |
| 13 | மானிப்பாய் | 25 | 25 | 25 |
| 14 | பண்டத்தரிப்பு | 25 | 25 | 25 |
| 15 | அளவெட்டி - மல்லாகம் | 15 | 15 | 15 |
| 16 | தெல்லிப்பழை | 75 | 75 | 75 |
| 17 | சங்கானை | 60 | 60 | 60 |
| 18 | சுன்னாகம் | 55 | 55 | 55 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 25 | 25 | 25 |
| 20 | வேலணை | 25 | 25 | 25 |
| 21 | ஊர்காவற்றுறை | 25 | 25 | 25 |
| 22 | காரைநகர் | 25 | 25 | 25 |
| 23 | தீவகம் | 15 | 15 | 15 |
| 24 | நெடுந்தீவு | 15 | 15 | 15 |
| | மொத்தம | 900 | 900 | 900 |

02 கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

03 கேள்விகளை சமர்ப்பிக்கவிரும்பும். ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வுப் புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2005.07.04 ஆம் திகதி தொடக்கம் 2005.07.17 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். இவ் வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களை பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

04 மீளளிக்க முடியாத கேள்வி வைப்புகளாக ரூபா 500 ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்த அரசாங்க அதிபரிடம் இருந்து கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

05 கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டு அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

06 பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்டக் கேள்விச் சபை, மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 18.07.2005இல் பி.ப.2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும் அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கேள்வி திறக்கப்படும். அப்பொழுது கேள்விக்காரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம்பெற்ற பிரதிநிதி சமுகமளிக்முடியும்.

07. கேள்விப்பத்திரத்தின் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் "சிவப்பு நாட்டரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.

08. கேள்விக்காரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ் வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வாறான கேள்விகளாகப் கருதப் படும்.

09 ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப் பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

10 கேள்விகள் பரிசீலனை செய்யப்படும்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்திற்கான விலை மாவட்டவிலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்டவிலை நிர்ணயம் செய்யப்படும்பொழுது விநியோகவிலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

11 கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியில் இருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஸ்
தலைவர்; அரச அதிபர்
மாவட்ட கேள்விச் சபை; மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

01/07/2005

(C/1466)

## வடமராட்சிப் பகுதி வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் சேதமடைந்த வடமராட்சிப பகுதியில் ரவ்பனின வீடுகளை நிர்மாணித்துக்கொடுக்கும் வேலைத்திட்டத்தை மேற்கொள்வதறகு ஏற்றவகையில் முதற்கட்டமாக அப்பகுதி வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் 5408 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இவற்றில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட வீடுகள் ஒவ்வொன்றும் தேசத்தை மீளக் கட்டியெழுப்பும் துரித செயலணி (ரவ்பன்) மூலம் தலா 5,40,000 ரூபா செலவில் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இவ் வீடுகளைக் கடடுவதற்கு தேவையான கட்டடப் பொருட்கள் மற்றும் தேவையான பொருட்களை கொண்டுசெல்வதறகு ஏற்றவகையில் வடமராட்சி கிழக்கு மற்றும் வடக்கு பகுதிகளில் உள்ள சுனாமியால் சேதமடைந்துள்ள வீடுகளை முதலில் திருத்தும் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித்திணைக்களம், உள்ளூராட்சி சபை என்பவற்றின் மூலம் மேற் கொள்ளப்பட்டுவருகின்றன.

இவ் வீதி திருத்தும் வேலைத் திட்டத்தை மிக விரைவாக செய்து முடிக்குமாறும இவ் வீதிகளை திருத்துவதற்கு தேவையான நிதியை திறைசேரி அதிகாரியிடம் கதைத்து துரிதமாக பெற்றுத் தருவதாகவும் தேசத்தை மீளக் கட்டியெழுப்பும் துரித செயலணியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந-19)

## உள்ளூராட்சி வாரத்தையொட்டி போட்டிகள்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி வாரத்தினையொட்டி சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே பொது அறிவு மற்றும், கட்டுரைப் போட்டிகளை சாவகச்சேரி நகரசபை நடாத்தவுள்ளது.

போட்டிகள் பிரிவு ரீதியாக நடாத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப்பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

போட்டி ஒழுங்கின் பிரகாரம மேறபிரிவு - உயர்தர மாணவர்களுக்கு, பொது அறிவு தேர்வு-இலங்கை, உலக நடப்பு விடயங்களும், கட்டுரை போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

மத்திய பிரிவு-9ஆம் 10ஆம் வகுப்பு மாணவர்களிற்கானது,

மேற்பிரிவுக்குரிய போட்டியில் பொது அறிவு கட்டுரை உள்ளூராட்சி சம்பந்தமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

கீழ்ப்பரிவு 7ஆம் 8ஆம் வகுப்பு மாணவாகளுக்குரியது. (i) உள்ளூராட்சி சபை தொடர்பான அறிவுப் போட்டியும், (II) ஆக்கப்போட்டிக்கான தலைப்புகளாக (அ) சனசமூக நிலையங்களும் அவற்றின் செயற்பாடுகளும (ஆ) முன்பள்ளிக் கல்வியில் உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்பு (இ) உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தி வேலைகள், (ஈ) உள்ளூராட்சி மன்றங்களின் வருமானங்களும் அவற்றின் அறவீடுகளும் போன்ற விடயங்களும் உள்ளடக்கிய போட்டிகள அமையவுள்ளதோடு சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் இப் போட்டிகளில் பங்கு கொள்ளலாம் எனவும் நகர சபை செயலாளர் தெரிவித்துள்ளார். (ந-21)

## எஸ்.பிக்கு பொது மன்னிப்பளிக்க ஜனாதிபதி தீர்மானம்?

(கொழும்பு)

நீதிமன்றத்தினை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் இருவருட சிறைத் தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் அமைச்சரும் எஸ்.பி.திஸாநாயக்கவை பொது மனனிப்பளித்து விடுதலை செய்வது குறித்து ஜனாதி சந்திரிகா குமாரதுங்க பரிசீலித்து வருவதாக தெரியவருகின்றது.

எஸ்.பி.திஸநாயக்க தொடர்பான ஆவணங்களை ஜனாதிபதி சில தினங்களுக்கு முன்னர் பார்வையிட்டுள்ளதுடன் நிபந்தனையின் அடிப்படையில் அவரை விடுதலை செய்யவும் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணை முன்வைக்கக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் இந்த விடுதலைக்கான உத்தரவினை ஜனாதிபதி விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு பொது மன்னிப்பு வழங்குவது குறித்து அண்மையில் ஐ.தே.க. எம்.பி. மிலிந்த மொறகொட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து பேசியிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. தனித்துப் போட்டி

ஜனாதிபதி தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பான மிக முக்கிய தீர்மானத்தை ஜே.வி.பி. தனது கிளைச் சங்கங்களின் பேராளர்களுக்கான தேசிய மாநாட்டில் சபையோரின் ஏகமனதான அங்கீகாரத்துடன் நிறைவேற்றியுள்ளது.

நாட்டிற்குப் புதிய தலைமைத்துவத்தை ஏற்படுத்தும் பொருட்டு எதிர்வரும் தேர்தலில் தனித்துப் போட்டியிட ஜே.வி.பி.தீர்மானித்துள்ளது. இத் தீர்மானத்தை கட்சியின் அரசியல்குழு உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான அனுரகுமார திஸாநாயக்க சபையோரிடம் முன்மொழிந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கொழுமபு மாநகர சபைத்திடலில் இடம்பெற்ற ஜே.வி.பி.யின் கிளைச் சங்கங்களின் பேராளர்களுக்கான தேசிய மாநாட்டில் மேலும் மூன்று முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

அத் தீர்மானங்களாவன தேசத்தை உயிரிலும் மேலாக பாதுகாக்கும்தேசிய புதிய தலைமைத்துவத்திடம தாயகத்தை ஒப்படைக்க துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை வாழ் சிங்கள - தமிழ் முஸ்லிம் மக்கள் கோரல்.

பொதுககட்டமைப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிப்புத் தெரிவித்து கூட்டணி அரசாங்கத்தில் இருந்து விலக எடுதத முடிவு மிகச் சரியானதென ஏற்றுக் கொள்ளல்.

தாயகத்தைக் காப்பாறற தேசிய முன்னணி ஒன்று அமைக்கப்பட வேண்டியது அவசியம். தேசிய ஒற்றுமை மற்றும் சௌபாக்கியத்தை ஏற்படுத்த இந்தத் தேசிய முன்னணியை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தப் பணிக்கு ஜே.வி.பி. தலைமை தாங்குதல்.

மேற்பட்ட தீர்மானங்களுக்கு தேசிய மாநாட்டில் கலந்துகொண்ட உறுப்பினர்கள இணக்கம் தெரிவித்ததை அடுத்து இத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ந)

## பல்கலை ஊழியர்கள் நேற்றும் போராட்டம்

எதுவித இணக்கப்பாடுகளும் எட்டப்படாத நிலையில் யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நான்காவது நாளாக நேற்றும் போராட்டததில் ஈடுபட்டனர். சம்பள முரண்பாட்டைத் தீர்க்குமாறு பல்கலைககழக மானியங்கள் ஆணைக்குழுவிடம அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பொதுச்சங்கம் கோரிக்கை விடுத்திருந்தபோதும் இப் பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வும் காணபபடாத நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் கல்விசாரா ஊழியர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். இந்நிலையில் நாடாளாவிய ரீதியில் உள்ள 13 பல்கலைக் கழகங்களின் ஊழியர் சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந)

ஆற்றாரும் ஆற்றி அடுபஇடன் அறிந்து
போற்றார் கண் போற்றிச்செயின் - குறள்

வலம்புரி

# அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகள் என்ன?

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் பல யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றன. வடக்குக் கிழக்கில் நடந்த யுத்தத்தோடு இலங்கைக்குள் நுழைந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் யாழ்ப்பாணத்திலும் குடியேறின.

ஒரு சில என ஆரம்பித்த அமைப்புக்களின் எண்ணிக்கை தற்போது பல என்றாகிவிட்டது. இந்த அமைப்புகள் யாழ்ப்பாணத்தில் இயங்குவதால் என்ன இலாபம் என்ற ஆராய்வுகளை மேற்கொள்ளும் தற்துணிவு யாருக்குமே இல்லாததனால் அந்த அமைப்புக்கள் ஒரு சிலரின் சுகபோக வாழ்க்கைக்கு உதவுவனவாகவுள்ளன.

வெளிநாட்டு அமைப்புக்கள் யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றபோதிலும் அவை வெளிநாடுகளில் இயங்குவது போன்ற வசதி வாய்ப்புக்களுடனேயே இயங்குகின்றன என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

அதாவது யாழ்ப்பாணத்தில் இயங்கும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது செயற்பாட்டிற்கென ஒதுக்கப்படுகின்ற நிதியில் 75 வீதமானவற்றை தமது டாம்பீகரமான வாழ்வுக்காக செலவிடுகின்றன. எஞ்சிய 25 வீதமும் பணியாளர்களின் வசதிகள் போக்குவரத்து செலவுகள் மேலதிக வேலைக் கொடுப்பனவுகள் என்று பங்கிடப்படுகின்றன. இதனால் மக்களுக்கான சேவை என்பது எதுவுமே இல்லை. ஏதோ அங்கு ஒரு மலசலகூடம், இங்கு ஒரு கிணறு அமைப்பு என பூச்சாண்டி காட்டிவிட்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் சீவியம் நடத்துவது மிகப்பெரும் துரோகத்தனமானதாகும்.

யாழ்ப்பாணத்தில் பல அமைப்புகள் இயங்குகின்ற போதிலும் அந்த அமைப்புக்களால் மக்கள் பெற்ற நன்மைகள் என்ன? பல ஆயிரக் கணக்கான ரூபாய்களை ஊதியமாகப் பெறும் இந்த அமைப்புக்களில் பணியாற்றுபவர்கள் செய்யும் வேலைதான் என்ன? கொள்வனவு செய்த சாராயம் எவ்வளவு? இந்த வாரம் கோழி இறைச்சி எவ்வளவு தேவை என்ற கணக்குகளை பதிவு செய்வதும் அறிக்கையிடுவதும் தான் அவர்களின் பணியா?

இந்தக் கேள்விகள் மக்கள் மத்தியில் இருந்தாலும் ஏழைகளின் குரல் எந்தளவுக்குத்தான் எழமுடியும்?

யாழ்ப்பாணத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களோ நக்குண்டார் நாவிழந்தார் என்ற நிலையில் சொல்லவும் மெல்லவும் முடியாமல் தவிக்கின்றனர்.

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களிடம் ஒன்று இரண்டு இலட்சங்களை கையேந்தி வாங்கிவிட்டு அதற்கே கணக்குக் காட்ட முடியாத நிலையில் தத்தளிக்கும் அந்த அமைப்புக்களால் எப்படித்தான் குரல் கொடுக்க முடியும்?

இங்கு குறிப்பிடப்பட்டது குறித்து பொது அமைப்புக்கள் கொதிப்படையலாம். அந்தக் கொதிப்பு நியாயமானதாக இருந்தால், தாம் நேர்மையுடன் நடப்பதாக எண்ணினால், தமது அமைப்புக்களில் சுத்துமாத்துக்கள் இல்லை என நினைத்தால் இப்போதே அவர்கள் தமது அமைப்புக்கள் சார்ந்த கணக்கறிக்கைகளை வெளியிட வேண்டும். இதனைச் செய்ய அரச சார்பற்ற அமைப்புக்கள் தயாரா?

# பேரினவாதம் தலைதூக்கி நாட்டை நாசமாக்க மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்படக்கூடாது

## புதிய ஜனநாயகக்கட்சி வேண்டுகோள்

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக தெற்கில் ஜே.வி.பி. மற்றும் ஜாதிகஹெல உறுமய என்பனவற்றால் விடப்பட்டுள்ள பேரினவாத விஷ அலைகளைத் தோற்கடித்து சமாதானப் பேச்சுவார்ததைக்கான அடுத்தகட்ட நகர்வுக்குச் செல்ல சகல இடதுசாரி ஜனநாயக முற்போக்கு இயக்கங்களும், சமாதானத்தை விரும்பும் அனைவரும் தத்தமது பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும்.

கடந்தகால வரலாற்றில், மீண்டும் மீண்டும் அரங்கில் உருவாகி இரத்தக் கறைபடிந்துபோன பேரினவாத வெறி தலைதூக்கி நாட்டை நாசப்படுத்த இன்னுமொரு சந்தர்ப்பம் வழங்கப்படக்கூடாது என புதிய ஜனநாயகக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசாங்கமும் புலிகள் இயக்கமும் இணங்கி கையொப்பமிட்டுக்கொண்ட பொதுக்கட்டமைப்பானது சுனாமிப் பேரழிவினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கின் இலட்சக்கணக்கான தமிழ்-முஸ்லிம்-சிங்கள மக்களின் மறுவாழ்வுக்கு தேவையான ஒரு ஏற்பாடேயாகும். இதனை எதிர்ப்பதென்பது சுனாமிப் பேரழிவில் இருந்து இன்றும் மீள முடியாது தவித்து நிறகும் மக்களுக்கும் அப்பிரதேசங்களுக்கும் செய்யும் மிகப்பெரும் துரோகமும் மனிதத்தன்மையற்ற குரூரப் போக்குமாகும்.

எனவே, பொதுக்கட்டமைப்பின் ஊடாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம், புனரமைப்பு, புனர்வாழ்வு எவ்வித பாரபட்சமும் இன்றி வழங்கப்படவேண்டும் என்பதை எமது புதிய ஜனநாயகக் கட்சி ஆதரித்து வரவேற்கின்றது. அதே வேளை இப்பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி.யும் ஜாதிகஹெல உறுமயவும் பேரினவாதக் கூச்சல் கிளப்பி நிற்பதையும் எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

அத்துடன், இப் பொதுக்கட்டமைப்பின் ஊடாக சமாதானத்திற்கான இரண்டாவது அடியெடுத்துவைக்கப்பட்டுள்ள சூழலை தென்னிலங்கையின் சமாதானத்தை விரும்பும் அனைத்து இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகளும் ஆதரித்துப் பலப்படுத்த வேண்டும்.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சி நாளை அட்டனில் நடாத்தவுள்ள தனது 27வது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. கட்சியின் மத்திய குழு சார்பாக அதன் பொதுச்செயலாளர் சி.கா. செந்திவேல், தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இருபதுவருட யுத்தத்தால் அழிவுற்று இயல்பு வாழ்வுக்குத் திரும்பமுடியாது இருந்துவந்த வடக்கு-கிழக்கின் மக்களே சுனாமி அழிவினாலும் அதிகம் பாதிக்கப்பட்டனர். அத்தகைய மக்களுக்கு பொதுக்கட்டமைப்பின் மூலமான மறுவாழவு என்பது அவசியமானதாகும். இதனை மனிதநேய மற்ற நிலை நின்று அடுத்து வரும் தேர்தல்களுக்காக ஜே. வி.பி.யும் ஜாதிக ஹெல உறுமயவும் பேரினவாத வெறிக் கூச்சல் கிளப்பி சிங்கள மக்கள் மத்தியில் பிரிவினைப் பீதியூட்டி வருவது எவ்வகையிலும் தேசப்பற்றாக இருக்கமுடியாது.

மலையகத்தில் மேல் கொத்மலைத்திட்டம், புத்தளம் நுரைச்சோலை, அனல் மின் திட்டம், சேது சமுத்திரக் கால்வாய்த்திட்டம், இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் போன்றன இலங்கையின் இறைமைக்கும், சுதந்திரத்திற்கும், மக்களின் இருப்பு, எதிர்கால நல்வாழ்வுக்கு அபாயம் விளைவிப்பனவாகும். இத்தகைய அழிவு தரும் நாசகாரத்திட்டங்கள் பற்றி ஜே.வி.பியோ ஜாதிகஹெல உறுமயவோ ஒரு சொல்தானும் எதிர்த்துப் பேசியது கிடையாது.

தாராளமயம், தனியார்மயம், உலக மயம் என்பனவற்றால் நாளாந்தம் ஏகப் பெரும்பான்மையான மக்கள் அனுபவித்து வரும் வாழ்க்கைச்சுமைகள் துன்பதுயரங்கள் பற்றி இவர்கள் வாய் திறக்கவில்லை.

அதேவேளை, பொதுக்கட்டமைப்பை வைத்து அரசியல் பிழைப்பு நடாத்தி அடுத்த தேர்தல்களுக்குரிய வாக்கு வங்கியைக் குறியாக வைத்தே பேரினவாதக் கூச்சலை கிளப்பி வருகின்றனர். இதற்கு உடந்தையான வழிகளில் சில முஸ்லிம் தலைமைகள் குறுகிய அரசியல் நோக்கிலும் சுயநல நோக்கு நப்பாசையிலும் பொதுக்கட்டமைப்பை எதிர்த்து கருத்துக்கள் பரப்பி வருகின்றமை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்றாகும். இத்தகைய முஸ்லிம குறுந் தேசியவாதப் போக்கு தமிழ்-முஸ்லிம் உறவைச் சீர்குலைத்து பேரினவாதிகளுக்கும் அந்நியக் கரங்களுக்கும் மட்டுமே உதவ வழிசமைக்கும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

எனவே, பொதுக்கட்டமைப்பின் ஊடாக அரசாங்கமும் புலிகள் இயக்கமும் தாமதமின்றி உரிய நடவடிக்கைகளையும் செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு தமிழ் -முஸ்லிம் -சிங்கள மக்களுக்கு மறுவாழ்வு எவ்வித புறக்கணிப்போ, பாகுபாடோ இன்றி வழங்கப்படுவதற்கு ஆவன செய்தல்வேண்டும் என்றுள்ளது.(ற)

# அரிய மரத்தவளைகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கடந்த 10வருட காலப்பகுதியில் இலங்கை உயிரியலாளர்கள் புதிய அரிய பெரும் எண்ணிக்கையான மரத்தவளைகளை மலைக்காடுகளுக்குள் கண்டறிந்துள்ளனர்.

இருப்பினும், இவை விரைவில் அழிவை எதிர்நோக்குபவையாக மனிதனால் அழிவடைந்து வருபவையாக உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

தற்போது 85 புதிய இன தவளைகள் கண்டறியப்பட்டுளஎன. இவற்றில் 19இனங்கள் அழிவடைந்துள்ளன. பெரும்பாலானவை தமது வாழ்விடங்களை இழந்ததாலேயே அழிவடைகின்றன.

ரப்பா, தேயிலை பயிரிடும் நோக்கோடு காடுகள அழிக்கப்பட்டதால் இவற்றின வாழ்விடங்கள் அழிவடைந்துவருகின்றன. தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் இன்னும் ஒரு சில வருடங்களில அவை அனைத்தும் அழிவை எட்டிவிடும் என உயிரியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபின்னர் அரசாங்கம் அறிமுகப்படுத்திய கரையோரப் பாதுகாப்பு வலயச்சட்டத்தினால் கரையோரப்பகுதிகளில் வாழும் பெருமளவு உயிரினங்கள் பாதுகாக்கப்படும் என உயிரியலாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

உலகெங்கிலுமுள்ள மொத்தம் 4,500இன தவளைகளில் 105 இனஙகளுக்கு இலங்கை தாயகமாகவுள்ளது. இவற்றில் 86 இனங்கள் மட்டுமே இன்று தப்பிப்பிழைத்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை பாதுகாப்பற்ற இலங்கையின் தென்மேறகு மலைக்காடுகளில் வாழ்கின்றன. உலகெங்கும் 34 இனதவளைகள் அழிவடைத்துள்ளன. தற்போது புதிதாக 17 இன நண்டுகளும் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-6)

## சோமாலியாவில் கடத்தப்பட்ட

# இலங்கை மாலுமியை விடுவிப்பதற்கு வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

சோமாலியாவில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இலங்கை மாலுமி ஒருவரை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை இலங்கை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டு வருவதாக அறிவித்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சோமாலியாவுக்கு ஐக்கிய நாடுகளின் உணவு நிவாரணங்களை ஏற்றிச்சென்ற கப்பல் ஒன்று கடந்த திங்கட்கிழமை கடத்தப்பட்டது.

இந்தக் கப்பலில் இலங்கை மாலுமி ஒருவர் கடமையாற்றியதாகவும் அவரை விடுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதி வெளிவிவகார அமைச்சர் விஸ்வ வர்ணபால தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் 850தொன் உணவுவகைகள் கொண்டு செல்லப்பட்டதாகவும், இந்தக் கப்பலைக் கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றுள்ளதாகவும், கப்பலில் இருந்து இலங்கை மாலுமியைவிட மற்றும் சிலரை விடுவிப்பதற்கு 5 இலட்சம் அமெரிக்க டொலர்களைக் கொள்ளையர்கள் கப்பமாகக் கேட்டிருப்பதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை மாலுமியும் மற்றைய சிலரும் பாதுகாப்பாக இருபபதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-2)

# இலங்கையை அபிவிருத்தி செய்ய யுத்தத்துக்கு தீர்வு காணவேண்டும்

## அமெ.தூதுவர் ஜெப்ரி லென்ஸ்டட்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகவும் பாதிக்கப்பட்ட ஏனைய மக்களுக்காகவும் உருவாக்கப்பட்ட ஏ.டி.ஐ. திட்டத்தின் மாத்தறை காரியாலயம் கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லென்ஸ்டட் கலந்து கொண்டு உரையாற்றும் போது,

இலங்கை மக்களின் நலனுக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவும் எனறும் இலங்கையை அபிவிருத்தி செய்வதானால் யுத்தத்திற்கு தீர்வுகாணப்பட்டு நிரந்தர சமாதானம் நிலை நாட்டப்படவேண்டும் என்று கூறினார்.

அவர்மேலும் கூறுகையில் வடக்கு-கிழக்கு மக்கள மட்டுமன்றி முழு நாட்டு மக்களும் யுத்தத்தினால பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு ஏ. டி.ஐ.திட்டத்தினூடாக உதவி அளிக்கப்படுகிறது என்றும் கூறியுள்ளார்.

மேலும் நாட்டில் அமைதி நிலவ எல்லோரும் ஒற்றுமையாக செயற்படவேண்டும் என்று அவர் தெரிவித்தார். (அ-7)



# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

**பலவனம், தளைகள் அனைத்தும் கற்பனை. அவற்றைப் பார்த்து ஒருவார்த்தை சொன்னால் அவை மறைந்து ஒழிய வேண்டும். பலவீன மடையாதீகள். தப்புவதற்கு வேறு வழியில்லை. வீரர்களாக எழுந்து நில்லுங்கள். அச்சம் வேண்டாம். உண்மையைக் கண்டு அஞ்ச வேண்டாம. மிகக் கொடிய துன்பமான மரணம் வந்தாலும் வரட்டும். நாம் இன்பமாக உயிரை விடத் துணிந்துள்ளோம்.**

சுவாமி விவேகானந்தர்

# ஹொக்லண்ட்-ஜயந்த நேற்று அவசர சந்திப்பு!

## புலிகளின் காலக்கெடு குறித்து தீவிர பரிசீலனை

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகள் போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்து குறித்து அரசுக்கு விதித்த இருவார காலக்கெடு தொடர்பாக யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ஹொக்லண்டுக்கும், அரச சமாதான செயலகப்பணிப்பாளர் ஜயந்த தனபாலவிற்கும் இடையே நேற்று முக்கிய சந்திப் பொன்று இடம்பெற்றது.**

போராளிகளின் பாதுகாப்புத் தொடர்பாக விடுதலைப்புலிகள் விதித்த காலக்கெடு பற்றி நேற்றைய சந்திப்பின் போது முழுமையாக ஆராயப்பட்டது.

இதன்போது புலிகளின் அறிவிப்பை கண்காணிப்புக் குழு அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தியது.

அமைதிச் சூழலின் நெருக்கடி நிலைகுறித்து இச்சந்திப்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. விடுதலைப்புலி உறுப்பினர்களின் பாதுகாப்புச் சம்பந்தமாக அவர்களினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை ஹொக்லண்ட் இச்சந்திப்பின்போது ஜயந்தவிடம் கையளித்தார்.நாங்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்தும் சமாதான முயற்சி குறித்தும் கவனம் செலுத்தியுள்ளோம் எனத்தெரிவித்த கண்காணிப்புக்குழுத்தலைவர் விடுதலைப்புலிகளின் பயணங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பான விடயத்தில் இருதரப் பினருகிடையிலான உறவு அவ்வளவு நல்ல முறையில் இல்லை என வருத்தம் தெரிவித்தார்.இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் வாராந்த மாநாடு ஒன்றை தாம் வழமை போல் ஆரம்பிக்கவுள்ளதாகவும் இம்முறை இச்சந்திப்பு எதிர்வரும் புதன் கிழமை இடம் பெறும் என்றும் இச்சந்திப்பில் விடுதலைப்புலிகளினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் குறித்து முதன்மை அளிக்கப்படும் எனவும் ஹொக்லண்ட் மேலும் தெரிவித்தார். (இ-4)

## தடகளப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பீடங்களுக்கிடையிலான தடகள் விளையாட்டுப்போட்டி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இன்றைய போட்டி பிற்பகல் 1.30 இற்கும் நாளைய போட்டி காலை 9மணிக்கும் ஆரம்பமாகவுள்ளது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக பேராசிரியர் சு.மோகனதாஸும் சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி எஸ்.வரதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-8)

## தமிழருவியின் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி சிவன்கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.பத்துத்தினங்கள் நடைபெறும் மகோற்சவத்தில் மாலை 6.30மணி தொடக்கம் 7.30மணிவரை காரைநகர் கம்பன்கழக அமைப்பாளரும் வவுனியா தமிழ்ச்சங்கத்தின் தலைவருமான தமிழருவி சிவகுமார் பெரியபுராண தொடர்சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். (ந)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் சரசாலை தெற்கு சரசாலை மத்தி ஆகிய கிராமங்களை ஒன்றிணைதது இன்று சனிக்கிழமை சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்தில் டாக்டர் கே. பாலசுப்பிரமணியம் தலைமையில் மருத்துவ பீட மாணவர்கள் இணைந்து இலவச மருத்துவ முகாமை நடத்தவுள்ளனர்.

இந்த மருத்துவ முகாமில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு,வைத்திய ஆலோசனைகள், மருந்துகள் வழங்கல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.(ற)

## திறப்புவிழா

குருநகரில் புதிதாக அமைக்கப்பட்ட குருநகர் கலாசார மண்டபம் இன்று மதியம் 12 மணியளவில் அருட்திரு. பி.எம்.இம்மானுவல் அடிகளாரால் திறந்து வைக்கப்படவுள்ளது. (ந-4)

## முஸ்லிம் ...

பிரகடனப்படுத்தி உள்ளனர் ஒலுவிலில் தென்கிழக்கு முன்றலில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டம் மற்றும் எழுச்சிப் பிரகடனத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கலந்து கொண்டனர் இதேவேளை நேற்று மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் இது தொடர்பாக மற்றுமோர் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. அங்கிருந்து பிரதேச செயலகம்வரை இக் கோரிக்கை உட்பட 8க்கோரிக்கைகளை முன்வைத்து வாசகஅட்டைகளை ஏந்தியவாறு பிரதேசசெயலகம்வரை பேரணி ஒன்றை நடத்தினர்.

பேரணி முடிவில் இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கான மனு பிரதேசசெயலாளர் இடமும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கான மனு போர்நிறுத்தக்கண்காணிப்காளர்களிடமும் அங்குவைத்து கையளிக்கப்பட்டது. (இ-4)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கத்தின் எதிர்கால அபிவிருத்தித்திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு சுண்டுக்குளி சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் தலைவர் வே. தவச்செல்வம தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்க உறுப்பினருக்கான உபகரணம் மற்றும் அடையாள அட்டை வழங்குவது தொடர்பாகவும், ஊடகவியலாளர் சங்கத்தின் ஊடாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலுக்கு புதிதாக பதிவுகளை மேற்கொண்ட அங்கத்தவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். (அ)

## பரு.செயலகத்தின் முன் மக்கள் போராட்டம்

(திருநெல்வேலி)

வடமராட்சிப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இரு பிரதேசங்களைச்சேர்ந்த மகளிர் அபிவிருத்திசங்கங்களின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பிரதேசசெயலகம் முன்பாக நேற்று போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

நேற்றுக்காலை 10மணிக்கு பிரதேசசெயலகம் முன் திரண்ட வியாபாரிமூலை மற்றும் திக்கம் ஆகிய பிரதேசங்களைச்சேர்ந்த நூற்றுக்குமேற்பட்ட மக்கள் ஒன்றுகூடி சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஆறுமாதங்கள் கடந்த நிலையிலும் எவ்விதமான நிவாரணங்களும் வழங்கப்படாமைக்கு கண்டனம் தெரிவித்து போராட்டம் நடத்தினர்.

இப்பிரச்சினையில் அக்கறை கொள்ளாது அரச அதிகாரிகள் அசமந்தப்போக்கை கடைப்பிடித்து வந்ததால் தாம் மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தமக்கு நியாயமான முறையில் நிவாரணம் வழங்கவேண்டும் எனவும் கடலில் இருந்து 125 மீற்றர் தூரத்திற்குள் வாழும் எம்மை புறக்கணித்திருக்கும் நோக்கத்தை தெளிவுபடுத்துமாறு கோரி பருத்தித்துறை பிரதேசசெயலரிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர். (அ-43)

## அரசு -புலிகள் தரப்பு...

பணிப்பாளருக்கும், நிதியமைச்சின் செயலாளருக்கும், ஜனாதிபதியின் செயலாளருக்கும் அழைப்பாணை விடுத்துள்ளார்.

ஜே.வி.பியும் தேசிய பிக்கு முன்னணியும் தனித்தனியாக நீதிமன்றத்தில் தொடுத்திருந்த 3 வழக்குகளிலும் முதலாவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் முதியன்சலாகே சுமனவீர ஜயசிங்கவின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணியொருவரும் 5ஆவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருக்கும் சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரலும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.

நீதிமன்றத்தில் ஆஜராகாத விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகப்பணிப்பாளர் சண்முகலிங்கம் றஞ்சன், நிதியமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யு.ஜே.எம்.கருணாரத்ன ஆகியோருக்கே அழைப்பாணைஅனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை தெரியாத அறியாத ஒரு தரப்பினருக்கு நிதியைக் கையாளும் அதிகாரத்தைக் கொடுக்கும் ஆழிப்பேரலை நிவாரண சபை உடன்படிக்கையினூடாக தெரிந்தே அரச நிதி சம்பந்தமான ஒழுங்கு விதிகள் மீறப்பட்டுள்ளதாகவும், அரசியலமைப்பிற்கு முரணாக கைச்சாத்திடப்பட்டுள்ள இந்த உடன்படிக்கை ஊடாகமேற்கொள்ளப்படும் நிதிப்பரிமாற்றங்களுக்கு தடைவிதிக்குமாறும் அந்த உடன்படிக்கையை செல்லுபடியற்றதாக்குமாறும் கோரி இந்த 3வழக்குகளும் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டமை தெரிந்ததே. (இ)

## திருமலையில் ...

இச்சம்பவத்தில் ஜெகன் (வயது 32) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

ஆட்டோ ஒன்றில் வந்தவர்கள் இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக கூறப்படுகிறது. (இ)

## கட்சியில்...

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நஜீப்.ஏ.மஜீப் ஆகியோரையும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை ரத்துச் செய்யுமாறு பாராளுமன்றச் செயலாளருக்கு அறிவித்தமை சட்டத்திற்குப் புறம்பானது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவ்வழக்கில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தலைவர் ரவூப் ஹக்கீம், ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர், தேர்தல் ஆணையாளர், பாராளுமன்றப் பொதுச்செயலாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர். (இ-8)

YOGI'S

ACADEMY OF BEAUTY CULTURE, HAIR DRESSING AND HOME SCIENCE

03.07.2005 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு CAKE EXHIBITION தொடர்பான கருத்தரங்கு நடைபெற உள்ளதால் பயிற்சியை முடித்த மாணவிகள் அனைவரும் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆசிரியை,
75, அம்மன் றோட் நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

(9717)

L.M.L பிறிடம், ஸ்கூட்டர் பாவனையாளர்களே

இந்தியாவிலும், கொழும்பிலும் உள்ள தொழில் நுட்பவியலாளர்கள் உங்கள் வாகனத்தை மீள்ாய்வு செய்வதற்காக யாழ்ப்பாணம் வருகைதர உள்ளார்கள். எனவே நீங்கள் காலதாமதமின்றி தொடர்பு கொள்ளவும்.

காலம்:- 02.07.2005 (இன்று)
நேரம்:- காலை 09 மணிதொடக்கம் 12.00 மணி வரைக்கும்

SPN மோட்டோர்ஸ்
171, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

(c-4)

எம்மிடம் சகலவிதமான ரீவிக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவித மான றேடியோக்களும் மற்றும் மின்சார உபகரணங்களும், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

நியூ சிற்றி றேடர்ஸ்

மேல்மாடி இல.135/1 கஸ்தூரியார் வீதி
குளத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226

நாதன்ஸ்
குளிரூட்டப்பட்டது | யாழ்ப்பாணம்
அஜித், தேவயானி நடித்த
காதல்கோட்டை
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சினிமா
சங்கானை
சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த
5 அடி 2 அங்குலம்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 [பு.நே]

மனோகரா
யாழ்ப்பாணம்
ஷங்கரின் இயக்கத்தில்
சியான் விக்ரம், சதா, விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்

அந்நியன்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30
இசை: ஹாரிஸ் ஜெயராஜ்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.